

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்
## கார்த்திகை – மார்கழி

மலர் 11 டிசம்பர் 2022 இதழ் 12

### பொருளடக்கம்


| | |
|---|---|
| ப்ரார்த்தனை | 3 |
| ஆசிரியர் பக்கம் | 4 |
| வண்டு ஸ்தோத்ரம் | 7 |
| பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| நீதிக் கதைகள் | 10 |
| பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| அனுக்கிரஹ பாஷணம் | 15 |
| பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| ப்ரஹ்மவித் ஆசீர்வாதம் | 18 |
| மார்கழி மாத விசேஷ தினங்கள் | 20 |
| ஸ்ரீ தேவி பாகவதம் | 21 |
| சாணக்ய ஸுபாஷிதம் | 24 |
| முகாம் நிகழ்ச்சிகள் | 31 |
| ஆசாரமும் ஒழுக்கமும் | 35 |
| வேதாந்த ஸம்வத்ஸரம் | 39 |
| ஸங்கர கீதை | 37 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரி | 43 |
| மகாபாரத சுருக்கம் | 45 |
| ஸனாதன தர்மம் கேள்வி பதில்கள் | 47 |




भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


நிர்வாகக் குழு

ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்
டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்




## ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


கௌரவ தலைமை ஆசிரியர் :
டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

ஆசிரியர் குழு :

பேராசிரியர் N.வீழிநாதன்
டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்
ஸ்ரீ T.N. ராமசந்திரன்
ஸ்ரீ T.S. ராகவன்
பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.
ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா
பேராசிரியர் K. ஸ்ரீநிவாஸன்



வெளியிடுவோர் :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்



அலுவலக முகவரி :
ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் – 631502.
தொலைபேசி : 044 – 27233115

மின் அஞ்சல் :
kamakotipradeepam@gmail.com


சந்தா விவரம்

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |


Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of Sri Kanchi Kamakoti Peetam, No1, Salai Street, Kancheepuram - 631502. Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jai Ganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।

कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हृतो भवेत्।।

# ப்ரார்த்தனை
# प्रार्थना

மேன்மையும், தலைமையும், கோபமும் ஆழங் காணமுடியாத மனமும் இனிமையான குளிர் ஜலமும், வெற்றித் திறனும், வெற்றிப் பெருமையும் பூஜையும், வீடு நிலம் முதலிய செல்வங்களும், புத்ர பௌத்ர ஸந்ததியும், செல்வப் பெருக்கும், கல்வியின் வளர்ச்சியும், ஸ்ரத்தையும், உண்மையும் ஸ்தாவர ஜங்கமப் பொருள்களும், தனமும், வசீகர சக்தியும், சரீர காந்தியும், ஆடல் பாடல்களும், அதனால் வரும் களிப்பும், உண்டானதும், உண்டாகப் போகும், தேவதைகளின் ஸ்துதியும், புண்ணியமும், வித்தமும், இனி கிடைக்கக் கூடிய பொருளும், சேமித்த நிலம் முதலிய சொத்தும், இனி வரப்போகும் சொத்தும், ஸுகமும், நல்ல வழியும், கைகூடிய யாகாதிகளின் நற்பயனும் ஒழுங்காக திரட்டிய பொருளும், கார்ய ஸாமர்த்தியமும், மதியும், திட சித்தமும் ஹே பரமேஸ்வரா எனக்கு அருள்வாய்.

*ஸ்ரீ ருத்ரம் சமகம்*

கண்ணார் கடல் போல் திருமேனி கரியாய்
நண்ணார்முனை வென்றிக்கொள்வார் மன்னு நாங்கூர்
திண்ணார் மதிள் சூழ் திரு வெள்ளக்குளத்துள்
அண்ணா அடியேனிடரைக் களையாயே

குன்றால் குளிர்மாரி தடுதுகந்தானே
நன்றாய பெரும்புகழ் வேதியர் நாங்கூர்
செந்தாமரை நீர்த்திரு வெள்ளக் குளத்துள்
எந்தாய் அடியேனிடரைக் களையாயே

கல்லால் கடலை அணியகட்டியுகந்தாய்
நல்லார் பலர் வேதியர் மன்னிய நாங்கூர்
செல்வா திரு வெள்ளக் குளத்துரைவானே
எல்லாவிடரும் கெடுமாறருளாயே

திருமங்கை ஆழ்வார்

# ஆசிரியர் பக்கம்

சென்ற இரு இதழ்களில் நமது ஸனாதன தர்மம் பற்றியும், அதன் விசேஷ அம்சங்கள் பற்றியும் மேலோட்டமாகப் பார்த்தோம். இவ்விதழில் அதைப்பற்றி அறிஞர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று பார்ப்போம்.

‘‘At the outset one is confronted by the difficulty of defining what HINDUISM is. To many it seems to be a name without any content. Is it a museam of beliefs ? A medley of rights, or a mere map. A geographical expression? Its content if it has any has altered from age to age from community to community. The ease with which Hinduism has steadily absorbed the customs and ideas of Peoples with whom it has come into contact is as the difficulty we feel in finding a common Feature binding together its different forms. But if there is not a unity of spirit binding its Different expressions and linking up the different periods of its history into one organic whole. It will not be possible to account for the achievements of HINDUISM.

**Dr. Radhakrishnan**

‘‘ This is the SANATHANA DHARMA the eternal religion. Under the stress of alien impacts She has largely lost hold not of the structure of the Dharma, but of its living reality. For the religion of India is nothing if it is not lived. It has to be applied not only to life, But to the whole of life, its spirit has to enter into and mould our society, our politics our Litreture, our science, our individual character, affections and aspirations.

**Aurobindo**

இப்போது ஹிந்து மதம் என்கின்ற பெயர் சொல்கிறோமே அதற்கு உண்மையில் இந்தப் பெயர் கிடையாது. வைதிக மதம், ஸனாதன மதம் என்றெல்லாம் சொல்லுகிறோமே அவை தான் பெயரா என்றால் அதுவும் கிடையாது. நம் ஆதார நூல்களில் எந்தப் பெயரும் குறிப்பிடவில்லை. நம் மதத்திற்கு ஏன் பெயரில்லை என்று யோசித்தபோது பல்வேறு மதங்கள் இருக்கும்போது தான் வித்யாஸம் தெரிய பெயர் கொடுக்க வேண்டும். ஒரே மதம் தான் இருந்தது என்றால் பெயர் எதற்கு? உலகம் பூராகவும் நம் மதம் இருந்தது என்பதற்கு சாக்ஷியங்கள் கிடைக்கின்றன.

மித்ரா வருண சாக்ஷியாக, ராமீஸஸ் உடன்படிக்கை இப்படி பல. நம் உபனிஷத் கதை ஆதாம் ஏவாள் கதையாக மாறியது.

மற்ற மதங்களில் இல்லாத ஒன்று நம் மதத்தில் உள்ளது. கர்மா தியரி என்பதுதான் அது. மற்ற மதங்களில் judgement day அன்று ந்யாய தீர்ப்பு வழங்குவார் என்பர். நம் மதத்தில் நாம் செய்யும் பாப புண்யங்களுக்கேற்ப ஜன்மாவைத் தந்து உய்விக்கிறான். ஜீவன்களுக்கு மறு பிறவி தந்து வாய்ப்புகளைத் தருகிறான்.

பிறக்கின்ற குழந்தைகள் ஏன் சில தாரித்ரியத்திலேயும் சில செல்வ செழிப்பிலும் இருக்க வேண்டும்? பூர்வ ஜன்ம வினைதானே இதற்குக் காரணம். மனிதன் விஷயத்தில் மட்டுமல்லாமல் ஸ்வாமி விஷயத்திலேயும் அவதாரங்களைச் சொல்வது. ஒரே பரமாத்மா தான் இத்தனை ஜீவராசியாகிருக்கிறது என்பது நம் மதத்தின் தாத்பர்யம். அதற்கு கர்ம பந்தமில்லை. அரூபமான பரமாத்மா பல ரூபங்களில் பல ரூபமாக வருகிறது என்று சொல்லி விக்ரக ஆராதனையை ஏற்படுத்தியுள்ளது இன்னொரு சிறப்பம்சம். விக்ரகம் தான் ஸ்வாமி என்று வழிபாடில்லை. மனதை ஒரு முகப்படுத்த ஸ்வாமி இந்த விக்ரகத்தில் இருப்பதாக எண்ணி வழிபாட்டு முறை அமையும்.

நம் மதத்தில் ஆயிரம் சடங்குகள் சொல்லியுள்ளன. ஆனால் இன்னொருவரை நம் மதத்திற்கு மாற்ற எந்த சடங்குமில்லை. இது ஒன்றே மோக்ஷம் என்று நம் மதம் கருதவில்லை. அதனாலேயே அதற்கு சடங்குகள் இல்லை. சமூக ரீதியாக நம் மதத்தில் விசேஷ அம்சம் ஒன்று உண்டு. அதுதான் வர்ணாஸ்ரம தர்மம். தனி மனிதன் படிப்படியாக உயர ஆஸ்ரமமும் சமுதாயம் நன்றாக இருக்க வர்ணதர்மமும் விசேஷமாக உள்ளவை. இதுவும் கர்ம கோட்பாடும்தான் அதிக விமர்சனத்திற்கு உள்ளானது.

வேற்றுமையில் ஒற்றுமையைக் காண்பதுதான் நம் மதம். ஸாமான்ய தர்மங்களை எல்லாரும் பின்பற்ற வேண்டும். அது தவிர வர்ணத்துக்கேற்றவாறு விசேஷ தர்மங்களையும் பின்பற்ற வேண்டும். இந்த வர்ணதர்மம் அதாவது எற்றத் தாழ்வு இருந்த போதும் மக்களிடையே உள் அன்பு நிரம்ப இருந்தது. அதுதான் இந்த மதத்தின் ஜீவன். இதைக் குறை கூறுபவர்கள் இந்த மதத்திலிருந்துதான் இவ்வளவு ஞானிகள் தோன்றியிருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும்.

இந்த பழைய தர்மங்களை முறிவுபடாமல் காப்பாற்ற வேண்டும் என்று ஸ்ரீ சங்கரர் எங்களுக்கு ஆணை இட்டுள்ளார். அவர் காட்டிய இந்த ஸனாத தர்மத்தை கார்யத்தில் நிறைவேற்றத் தருவது ஒரு பக்கமிருந்தாலும் இவை யாவும் லோகக்ஷேமம் ஆத்ம க்ஷேமம் கருதியே வகுக்கப்பட்டன .

(மகா பெரியவா)

இதுவரை நம் மதத்தைப் பற்றி சொல்லப்பட்ட கருத்துக்களைப் பார்த்தோம். இன்னும் பல அறிஞர்கள் பாராட்டிப் பேசினாலும் பெரியவா சொன்னது உபன்யாசம் செய்தது சிகரமாய் விளங்குகிறது. இந்த மூன்று கட்டுரைகளில் நம் மதம் பற்றி சாரம்சமாகத்தான் சொல்லியுள்ளோம். கடைபிடிக்க வேண்டியது. நம் கடமை மேலும் யக்ஷப் ப்ரஸ்னத்தில் யக்ஷனுக்கு யுதிஷ்டிரர் ஒரு கேள்விக்கு பதில் தருவார். அதில் ''ஸ்ருதிகளோ பல ஸ்ம்ருதிகளோ பின்ன பின்னமாயுள்ளன. இதில் எதை பின்பற்றுவது? தர்மத்தின் பொருள் குகையில் உள்ளது. மகான்கள் எந்த வழியில் சென்றார்களோ அதைப் பின்பற்றுவதே சிறந்த தர்மம்'' என்று கூறுவார். அதையே நாமும் பின்பற்றுவோம் என்று கூறி இவ்விதழை ஸ்ரீ சரணர்களின் பொற்பாதத்தில் ஸமர்ப்பிக்கிறோம்.

ஜய ஜய சங்கர! ஹர ஹர சங்கர!

## வருந்துகிறோம்

அண்ணாலை பல்கலை கழகத்தின்

ஸம்ஸ்கிருதத் துறையில் தலைமை ஏற்றவரும்,

வடமொழியில் பண்டிதரும்,

**ஸம்ஸ்கிருதஸ்ரீ** இதழின் ஆசிரியரும்,

ஸ்ரீ மடத்தின் தொண்டருமான **ஸ்ரீ ஸ்ரீநிவாஸ சர்மா**

அவர்கள் கடந்த மாதம் ப்ராஹ்மீ பாவம் அடைந்தார்.

அன்னாரது ஆத்மா சாந்தி அடைய ப்ரார்த்திக்கிறோம்.

# வண்டு ஸ்தோத்ரம்

ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## க்ருஷ்ண பக்தர்களான அத்வைதிகள்



இம்மாதிரி நிலையில்தான் பரம அத்வைதியான (ஸதாசிவ) ப்ரம்மேந்த்ராள் ப்ரஹ்மணி மாநஸ ஸஞ்சர ரே (ஹே, மனமே, நிர்குண ப்ரஹ்மத்திலேயே ஸஞ்சாரம் பண்ணு) என்று சொல்லிவிட்டு உடனே, மயிலிறகைத் தலையில் சொருகிக் கொண்டிருக்கிற ஸகுணமான க்ருஷ்ண பரமாத்மாவைப் பரவசமாக வர்ணிக்க ஆரம்பித்து விடுகிறார்.

இப்படித்தான் ஆச்சார்யாளும் ஏராளமான ஸ்தோத்ரங்களை ஸகுணப்ரஹ்மத்தின் பல ரூபங்களாக இருக்கப்பட்ட அநேக மூர்த்திகளின்மீதும் பாடியிருக்கிறார். அவற்றில் கேசாதி பாத வர்ணனை, பாதாதி கேச வர்ணனை எல்லாம் பண்ணி, அந்தந்த தெய்வத்தின் குணகண மஹிமைகளையும், லீலைகளையும் உள்ளமுருகிக் கொண்டாடியிருக்கிறார்.

'குண மந்திரம்' என்பதில் நிர்குணத்தை மறந்து விட்டார். அல்லது அதை மறுத்து முரணாகப் பேசுகிறார் என்று அர்த்தமில்லை. மாறாக, குணமந்திரம் என்பதாலேயே நிர்குணத்தைத்தான் அவர் சொல்கிறார் என்று எனக்குத் தோன்றுகிறது.

VIBGYOR என்று ஏழு கலர்களைச் சொல்கிறோம். இந்த ஏழையும் ஒன்றாகச் சேர்த்துவிட்டால் என்ன ஆகிறது? ஒரு கலரும் இல்லாமல் வெள்ளை வெளேர் என்று ஆகிவிடுகிறதல்லவா?

இதே மாதிரி அத்தனை குணங்களும் அவனிடம் குடி கொண்டிருப்பதாலேயே அவன் ஒரு குணமும் இல்லாத நிர்குண வஸ்துவாக இருக்கிறான்.

ஒரு கலரும் இல்லாத ஸூர்ய வெளிச்சம் refraction-ல் ஏழு கலர்களாகப் பிரிகிற மாதிரி அந்த நிர்குணம் தான் மாயையில் பட்டு, அந்த refraction- ல் இத்தனை

குணங்களுமாகிறது. நாம - ரூப ரஹிதமான ப்ரஹ்மம் இத்தனை நாம - ரூப - ஜீவ ஜகத்துக்களாகிறது.

'தாமோதர' என்றவுடன் 'குணமந்திர' என்று ஆசார்யாள் சொல்வதில் ஒரு வார்த்தை விளையாட்டே இப்போது தெரிகிறது. தாம - உதரன் என்றால் கயிற்றில் கட்டப்பட்ட வயிற்றை உடையவன். 'குணம்' என்றாலும் கயிறு என்று அர்த்தம் உண்டு என்றேன். 'குண மந்திர' என்பது குணங்களிலே கட்டப்பட்ட மாதிரி நிர்குண வஸ்து இருக்கிறது என்று சொல்வது போலத் தோன்றுகிறது. வாஸ்தவத்தில் குணங்களால் கட்டுப்படுத்த முடியாதவன். ஆனாலும் யசோதை எத்தனை கயிற்றாலும் கட்டி முடியாத வயிற்றை பகவானே பிறகு கட்டுக்கு அகப்படுத்திக் கொண்டது போல ப்ரஹ்மமும் இப்படி ஸகுணம் மாதிரிக் கட்டுப்பட்டு வேஷம் போடுகிறது.

'என்ன ஆச்சர்யம்!' உபநிஷதங்களின் அர்த்தமான நிர்குண ப்ரஹ்மம் இப்படி உரலில் கட்டுப்பட்டிருக்கிறதே! என்று க்ருஷ்ண கர்ணாம்ருதத்தில் ஒரு ச்லோகமுண்டு. குண மந்திரமாக இருப்பதும் இப்படி கட்டுப்பட்டிருக்கும் நிலைதான் என்கிற மாதிரி ஷட்பதீ ஸ்துதியில் அடுத்தடுத்து 'தாமோதர, குண மந்திர' என்று வருகிறது.

இப்படி குணத்தோடு, ரூபத்தோடு அது வருகிற போது அதை ரஸித்து ஆனந்தப்படுகிற நிலையிலேயே, அடுத்து ஸுந்தர வவதநாரவிந்த என்கிறார்.

ஸுந்தர - அழகான, வத- முகமாகிய; அரவிந்த - தாமரை. தாமரை போல அழகான முகம் படைத்தவன் என்று பகவானை வர்ணிக்கிறார்.

பரம அத்வைதிகள், பேச்சிலே மட்டுமில்லாமல் அநுபவிகளாக இருந்த அத்வைதிகள், பகவானின் ரூபஸெளந்தர்யத்தை ஓஹோ என்று வர்ணித்து ஆனந்தித்திருக்கிறார்கள். அத்வைதிகள் பக்தர்களாயிருப்பதில் குறிப்பாக கிருஷ்ணரை இஷ்ட தெய்வமாகக் கொண்டவர்களாகவே அதிகம் இருந்திருக்கிறார்கள்.

க்ருஷ்ண கர்ணாம்ருதம் பண்ணிய லீலாசுகர் அத்வைத ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்தவர்தான். மலையாளத்தைச் சேர்ந்தவர் அவர். அங்கே அத்வைத ஸம்ப்ரதாயம் தான் உண்டு. அதோடு கூட அவர் தங்கள் குடும்பத்தைப் பற்றிச் சொல்லிக் கொள்ளும் போது தங்களுடைய குலதெய்வம் சிவபெருமான் என்றும், தாங்கள் சிவ பஞ்சாக்ஷரி ஜபத்தையே உயர்கதியாகக் கொண்டவர்களளென்றும் சொல்லிக் கொள்கிறார். ' ந கலு விசாரணீய: - இதைப் பற்றிக் கொஞ்சம்கூட ஸந்தேஹமில்லை என்று உறுதிப்படுத்திச்

சொல்கிறார். அப்படியிருந்தும் கிருஷ்ணரிடமே உயிரை வைத்து, நம்முடைய மனஸைக் கொள்ளை கொள்கிற முறையில் அவர் கர்ணாம்ருதம்' செய்திருக்கிறார்.

நானூறு நானூற்று ஐம்பது வருஷத்துக்கு முந்தி மதுஸூதன ஸரஸ்வதி என்று ஒரு பெரியவர் இருந்தார். பெங்காலை (வங்காளத்தை) சேர்ந்தவர் என்பது பொது அபிப்ராயம். 'அத்வைத ஸித்தி' என்று ஒரு உத்தம க்ரந்தம் உபகரித்திருக்கிறார். அத்வைத ஸம்ப்ரதாயத்துக்கு வேறு நூல்களும் உதவியிருக்கிறார். இவரே 'பக்தி ரஸாயனம்' என்றும் க்ரந்தம் செய்திருக்கிறார். நிர்குண ப்ரஹ்ம அநுபவமான ஞானத்துக்கும், ஸகுண ப்ரஹ்ம உபாஸனையான பக்திக்கும் contradiction (முரண்பாடு) இல்லை என்று நிலை நாட்டுவதற்காக இந்த நூலை எழுதினார்.

மதுஸூதன ஸரஸ்வதி க்ருஷ்ண பரமாத்மாவின் பரம பக்தர். 'சிவ மஹிம்ந ஸ்தோத்ரம்' என்று ரொம்பவும் உயர்ந்த சிவபரமான ஸ்தோத்ரம் ஒன்று உண்டு. மஹா ராஷ்ட்ரத்திலிருந்து ஆரம்பித்து வடக்கே போகப் போக அது ஸகல ஜனங்களுக்கும் தெரிந்திருக்கும். இங்கே உங்களில் பல பேருக்கு அதன் பெயர்கூட நான் சொல்லித்தான் தெரிய வேண்டியிருக்கிறது! இந்த 'சிவ மஹிம்ந ஸ்தோத்ரம்' க்ருஷ்ணனையும் ஸ்தோத்ரம் பண்ணுவதாக அதன் வார்த்தைகளுக்கு அர்த்தம் பண்ணி அவர் (மதுஸூதனர்) ஒரு வ்யாக்யானம் எழுதியிருக்கிறார். அதாவது அதற்கு சிவபரமாக அர்த்தம் பண்ணியதோடு விஷ்ணுபரமாகவும் அர்த்தம் பண்ணி எழுதியிருக்கிறார்.

'அத்வைதிக்கு பக்தியே இருக்கக் கூடாது; அப்படி இருந்தாலும் அது ஆசார்யாளுக்கு இருந்த மாதிரி ஸகல தெய்வங்களையும் ஒன்றாகவே நினைக்கிற பக்தியாகத்தான் இருக்க வேண்டும்' என்று புஸ்தகம் படித்தே அத்வைதத்தைப் பற்றித் தெரிந்து கொண்டுள்ள நாம் நினைத்தாலும், அத்வைத அநுபவியான மதுஸூதன ஸரஸ்வதி க்ருஷ்ண பரமாத்மா என்ற ரூபத்திலேயே விசேஷ பக்தி வைத்திருந்தார்.

உடுப்பியில் க்ருஷ்ணனை ப்ரதிஷ்டை பண்ணினவர் மத்வாசார்யார். அவருடைய ஸித்தாந்தத்தை வலியுறுத்திச் சொல்லி, (சங்கர) ஆசார்யாளின் அத்வைதத்தை வன்மையாகக் கண்டித்தவர்களுள் வ்யாஸ தீர்த்தர் முக்கியமானவர். வ்யாஸ தீர்த்தருடைய ஆக்ஷேபனைகளுக்கு எதிராகப் 'பாயின்ட்' களை கொடுத்தே மதுஸூதன ஸரஸ்வதி பரம அத்வைதமான நூல்களை எழுதினார். இப்படி நிர்குண ப்ரஹ்மாநுபவத்தை நிலைநாட்டிய இவரே. குழந்தைக் கண்ணன் விழித்தெழுந்தவுடன் கொட்டாவி விட்டுக் கொண்டு சோம்பல் முறித்ததை நெஞ்சுருகிப் பாடியிருக்கிறார்!

(தொடரும்)

# நீதிக் கதைகள்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

# நாராயண சேவை


நம்முடைய இந்து மதம் ஆதிக்காலம் தொட்டு வந்து கொண்டிருக்கும் ஒரு தர்மம். அது ஒரு திவசம் ஆரம்பிக்கப்பட்டது அல்ல.

கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் இப்படி யுகம் யுகமாய் வந்து கொண்டிருக்கிறது. நரசிம்ம பகவான் அவதாரம், கிருத யுகத்திலே நடந்ததாகும். கிருத யுகத்திலே ஐந்து அவதாரங்கள் மச்ச, கூர்ம, வராக, நரசிம்ம, வாமனம் எனப்படும். இந்த ஐந்து அவதாரத்தில் ஒன்றான சிங்கம் எனப்படும் நரசிம்ம அவதாரம் எடுத்து வந்தார் பகவான்.

ஈஸ்வரன் உண்டா, இல்லையா? என்ற சந்தேகத்திற்கு ப்ரத்யக்ஷமாக சுயமாக வெளிப்பட்டு பக்தன் பிரகலாதனுக்காக அவதரித்தார் பகவான்.

நரசிம்ம பகவானை ஆதிசங்கரர் கூட ஸ்ரீமத்சக்ரபாணி என்கிற ஸ்தோத்திரத்தில் கூடப் பாடினார்.

அதே போல சுதர்சனம் என்பது விஷ்ணு பகவானுக்கான சக்கரம். விஷ்ணு ஸ்வரூபமாய், சுதர்சனச் சக்கரம் கொண்டு அவதரித்த க்ஷேத்திரம் இது.



நரசிம்ஹம். பாதி நரம், பாதி சிம்ஹம். அதுதான் நரசிம்ஹம்.

அதனால் தான் இரணியனுக்குப் பிரத்யட்சமாகி அதன் மூலம் அனைவருக்கும் அருள்பாலிப்பதற்காக அவதாரம் எடுத்தார் பகவான். அதுதான் 'நரசிம்ம அவதாரம்'. இந்த நரசிம்ம அவதாரத்தில் 'உக்கிர அவதாரம்'. சாந்த அவதாரம் என்ற இரண்டு அவதாரங்கள் உண்டு.

இரணியனுக்குக் காட்சியளித்தது உக்கிர நரசிம்மன். பக்தன் பிரகலாதனுக்குக்

காட்சியளித்தது சாந்த நரசிம்மம்.

லக்ஷ்மி நரசிம்மம் என்பது ஒன்றும் உண்டு. பல க்ஷேத்திரங்களில் நரசிம்ம க்ஷேத்திரங்கள் உண்டு. மொத்தம் ஒன்பது நரசிம்மர்கள் உண்டு.

வைணவ தர்மத்திலே அவதார ஸ்வரூபம், மூர்த்தி ஸ்வரூபம் ஆகியவை சிறப்பு மிக்கது.

பதினெட்டுப் புராணங்களிலும் பகவானின் அருள் அருமைகளைப் பற்றிச் சொல்லப்பட்டுள்ளது. பகவானின் பல்வேறு நிலைகளும் சொல்லப்பட்டுள்ளது.

விக்கிரஹ ஸ்வரூபத்தில் வந்து ஒவ்வொரு க்ஷேத்திரத்திலும் அவதரித்து, பக்தர்களுக்கு வரம் அளித்து வருகிறார் பகவான். சர்வ வியாபி, சர்வ யக்ஞன், சர்வமங்கள ஸ்வரூபி என்றெல்லாம் சொல்லப்படுகிறார்.

ஒவ்வொரு அம்பலத்திலும் நிகல்ப ஸ்வரூபத்தோடு பகவான் காட்சியளிக்கிறார்.

தமிழகத்திலே ‘ஹரிஹர’ ஸ்வரூபம்.

கேரளத்திலே ‘நரஹரி’ ஸ்வரூபம்.

நரசிம்ஹ க்ஷேத்திரங்கள் கேரளத்திலே நிறைய இருக்கின்றன. க்ஷேத்திரங்களில் உற்சவங்கள் நடந்து ஈஸ்வரனுக்கு விசேஷமான சக்திகள் கிட்டி, அவற்றை அனைத்து மக்களும் அனுபவிக்க வேண்டும்.

மனம் முதலில் சுத்தமாக இருக்க வேண்டும். வீடும் சுத்தமாக இருக்க வேண்டும். ஆலயமும் சுத்தமாக இருக்க வேண்டும். நம்முடைய வஸ்திரங்கள் சுத்தமாக இருக்க வேண்டும். அதற்கு மேலே அம்பலத்தில் ஸ்வாமி அணியும் ஆடைகளும் கூடச் சுத்தமாக இருக்க வேண்டும்.

நம்முடைய வீட்டிலே தீபம் எரிவது விசேஷம். அதைவிட ஆலயத்திலே தீபம் எரிவது ரொம்ப ரொம்ப விசேஷம்.

வீட்டிலே நாம் எல்லாம் எதையாவது சாப்பிடுகிறோம். அதைவிட அந்தப் பகவானுக்குப் படைத்து விட்டு, பிறகு அந்தப் பிரசாதத்தைச் சாப்பிடுவது ரொம்ப விசேஷம்.

பகவானுக்கு நைவேத்தியம் பண்ணி நாம் அதைப் பிரசாதமாக சாப்பிட்டால் ரொம்ப ரொம்ப விசேஷம். ஹோட்டல்களில் சாப்பிடும் உணவைவிட வீட்டில் பகவானுக்குப் படைத்து அதை எடுத்து சாப்பிடுவது ரொம்ப விசேஷம்.

பகவத் பிரசாதம் நல்ல சம்ஸ்காரத்தை மனதுக்குக் கொடுக்கும்.

**பகவான் –** சிவன், நரசிம்மன், சுதர்சனம், கணபதி இவர்கள் எல்லாம் நம்முடைய வீடு, வாசல், நம்முடைய வயல்,

விவசாயம், நம்முடைய பேங்க்.... என்பது போல உரிமையோடு பாவிக்கப்பட வேண்டும்.

எல்லாவற்றிலும் 'நம்முடைய' என்ற நெருக்கமான உணர்வு இருக்க வேண்டும். 'நம்முடைய ஸ்வாமி' என்ற உணர்வு இருக்க வேண்டும். அப்படிப்பட்ட பக்தியுள்ள சத்சங்கங்கள்தான் மனித ஜீவிதத்திற்குச் சாந்தியையும், சந்தோஷத்தையும், கொடுக்கக் கூடியது.

இந்தக் கேரளத்திலே ஒரு பக்கம் குருவாயூரப்பன் க்ஷேத்ரம், இன்னொரு பக்கம் ஐயப்பன் க்ஷேத்ரம். மத்தியிலே விசேஷமான ஒரு க்ஷேத்திரம் – நரசிம்ஹ சுதர்சன க்ஷேத்திரம் !

எல்லா மக்களும் நாராயண ஜெபம், நரசிம்ஹ ஜெபம் எல்லாம் செய்து பக்தியிலே ஈடுபட வேண்டும். அம்பலத்திலே வந்து எதையும் சம்சாரிக்கக் கூடாது.

அம்பலத்திலே வந்து பகவானைப் பக்தியோடு ஸ்தோத்திரம் சொல்லி ஜெபிக்க வேண்டும். அதுதான் நமக்கு நல்ல பலனை அளிக்கும்.

ஆயிரக்கணக்கான க்ஷேத்திரங்களில் இந்த நரசிம்ஹ க்ஷேத்திரம் முக்கியமானதாக விளங்குகிறது.

அந்த பகவானுக்கு சொர்ண ஆபரணங்கள், கவசங்கள் எல்லாம் பக்தர்களால் தேவஸ்தானம் மூலமாக வழங்கப்பட்டுள்ளது.

நாங்கள் இந்து ஜனங்களின் பிரதிநிதியாக இருந்து, இன்றைக்கு இக்கோயிலில் இந்த விசேஷ கருமம் நடந்திருக்கிறது.

மாதா, பிதா, குரு, ஈஸ்வரன்...

அச்சன், அம்மை, குரு, ஈஸ்வரன்...

ஆகிய நால்வரிடமும் விசேஷமான விசுவாசமும் பக்தியும் கொண்டு ஆராதனைகள் செய்ய வேண்டும்.

இங்கே வீட்டுக்கு வீடு அச்சன், அம்மை, உண்டு. குரு அநுக்கிரகத்தோடு ஈஸ்வரனுடைய பயனைப் பெறுவது இந்து தர்மத்தின் விசேஷம் ஆகும்.

ஈஸ்வரனே குருவாக வந்து நல்ல காரியங்களைச் செய்கிறார். எல்லா மக்களிடமும் பக்தி விசுவாசம், கொண்டு இந்து தர்மத்தின் ஆதாரமான விஷயமான சத்சங்கங்களோடு ஆலயங்களையும் திருப்திப்படுத்த வேண்டும்.

நல்ல புத்தி, நல்ல மனசு கொண்டு, பகவானுக்குச் சேவை செய்து, எல்லோரையும் நேசித்து, பகவான் நரசிம்ம சுதர்சனரின் ஆசி பெற ஆசீர்வதிக்கிறோம்.

நாராயண... நாராயண... நாராயண...

# யக்ஞம் தரும் சுபிட்சம்

நம்முடைய தர்மத்திற்கு தேவ தர்மம், வைதீக தர்மம் என்ற பெயர்கள் இருக்கிறது. ரிக், யஜுர், சாமம், அதர்வணம் என்ற நான்கு வேதங்கள் உண்டு.

இன்று அந்த வேதங்களைப் படிக்கும் பழக்கம் மிகவும் குறைந்து விட்டது. வேதப்படி யாரும் நடப்பதில்லை. யாகம் செய்து வந்த பரம்பரை எல்லாம் போய்விட்டது.

இங்கே டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்கள், அக்கறை எடுத்து வேத மந்திரங்களை, யக்ஞத்தில் ஒரு எடுத்துக்காட்டாக வாழ்ந்து காட்டினார்.

இந்தக் காலத்தில் பட்டினி கிடந்து யக்ஞம் செய்வது ரொம்பக் கஷ்டம். நேரம் கிடைக்கவில்லை, பணம் கிடைக்கவில்லை என்று இன்று காரணம் சொல்கிறார்கள். அவற்றைக் கடைப்பிடிப்பது ரொம்பக் கஷ்டம்.

ஆனால் அந்த யக்ஞம் செய்தால்தான் தேகம் சுபிட்சம் பெறும். யக்ஞம் செய்தால்தான் மழை வரும். மழை வந்தால்தான் வெள்ளமும் வரும்.

வைதீக தர்மம் புரிய வேதங்களைப் படிக்க வேண்டும். வேதத்தில் உள்ள அர்த்தங்களைப் புரிந்து படிக்க வேண்டும். ‘‘நீ தர்மம் புரியவே பிறந்திருக்கிறாய்’’ என்று வேதம் கூறுகிறது. சகாயத்தை எதிர்பாராமல் வைதிக தர்மத்தைப் புரிய வேண்டும். ஆனால், இன்றைக்கு சகாயம் செய்தால்கூட அதற்கு ஆள் கிட்டுவது இல்லை.

கேரளத்திலும், இந்த தர்மம் உள்ளது. ஆதிசங்கரர் அவதரித்த பூமி என்பதை நினைவுபடுத்வது முகமாக, டாக்டர் ராதாகிருஷ்ணன் ஏற்படுத்திய யக்ஞம் நம்மால் போற்றக் கூடியது.

தர்ம சம்ரட்சணம் செய்ய வேண்டும். யக்ஞ சம்ரட்சணமும் செய்ய வேண்டும். யக்ஞம் ஒன்றுதான் நமக்கு மூச்சுக்காற்று மாதிரி. மூச்சுக்காற்று இல்லா விட்டால் பிராணனே இருக்காது. அதனால் மூச்சுக் காற்று மாதிரி யக்ஞத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். காப்பாற்ற வேண்டும். அதனால் கிடைக்கும் சகாயத்தை நாம் எல்லாம் அனுபவிக்க வேண்டும்.

திருச்சூரில் செய்யும் யக்ஞம் திருச்சூருக்கு மட்டும் சகாயமாக இருக்காது. தேசம் முழுவதுக்கும் சகாயமாகப் போகும். உலகம் முழுவதுக்கும் பலன் தரும். அதுதான் நம் இந்து தர்மத்தின் விசேஷமாகும்.

ஒருவர் செய்யும் நல்ல காரியம் எல்லோருக்குமே பலன் கிட்டுவதாக அமையும். அப்படிப்பட்ட பரிபூரணமான இந்துக் கர்மாவை வளர்த்த டாக்டர் ராதா

கிருஷ்ணனுக்கும், சம்பந்தப்பட்ட அனைருக்கும் ஆண்டவன் ஆசி கிட்டும்.

ஒவ்வொருவரும் கொஞ்சமாவது வேதம் படிக்க வேண்டும். அர்த்தம் புரிந்து கொள்ள வேண்டும். அதைக் கடைப்பிடிக்க முயலவும் வேண்டும்.

இவையெல்லாம் செய்வதால் யக்ஞத்தின் பலன் நம் எல்லோருக்குமே கிட்டும். யக்ஞம் புரிவதால் நமக்கு மட்டும்தான் பலன் கிடைக்க வேண்டும் என்று நினைக்கக் கூடாது. எல்லோருக்குமே பலன் கிடைக்க வேண்டும் என்று விரும்ப வேண்டும். எல்லா நாட்டுக்காரர்களுக்கும் பலன் கிடைக்க வேண்டும்.

ஆறு விஷயங்களை நாம் கடைபிடிக்க வேண்டும்.

தானம் வாங்கணும், வாமன அவதாரம் மாதிரி தானத்தைக் கைநீட்டி வாங்கணும். கொடுக்கணும், பெரிய தர்மம் பண்ணனும்.

பிரதிகரணத்தின் பலன் என்ன? பாவம், தோஷம் வரும். தானம் கொடுக்கும் போது அந்தப் பாவம் எல்லாம் போய்விடும்.

யக்ஞம் செய்யணும், யக்ஞம் செய்விக்கணும், வேதம் படிக்கணும், அடுத்தவருக்கு படிப்பிக்கணும். இல்லாவிட்டால் படித்தது மறந்துவிடும். இது பாரம்பரியமாக நடந்து வருகிறது.

இதுபோன்ற நல்ல விழாக்களை நடத்தும் திரிச்சூர் பிரமாண சமூகத்திற்கு விசேஷ ஆசிர்வாதம் பண்ண வேண்டும். வேதத்தை உற்சாகப்படுத்தும் சபாவை உற்சாகப்படுத்த வேண்டும். அதுதான் பெரிய விஷயம்.


இனி கவலை வேண்டாம். 50, 70, வருடங்களுக்கு முன் உள்ள பழைய

(Reprint or Letterpress Books)

ஸம்ஸ்க்ருத, தமிழ், க்ரந்தம், கந்நடம், தெலுங்கு, etc.

ஆகிய எல்லா மொழிகளிலுள்ள புத்தகங்களை

புதிய Fontல் அச்சிட்டுதரப்படும்.

(Without Re-typeing, no proof reading)

விவரங்களுக்கு : **V.K.N. Enterprises, Mylapore,**

**Chennai-600004, Cell : 9840217036, vknprinter@gmail.com**

*We reprint old books without retyping ! Books of 50,70 etc. years can be reprinted with new fonts in all languages. Sanskrit, Tamil, Grantham, Telugu, English, Kannada, Malayalam, Hindi etc.*

*Contact above address.*

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

எந்த சமயத்திலே தர்ம சிந்தனையை வளர்க்க வேண்டிய தேவை அதிகமாக இருக்கிறதோ, தர்மத்தை கடைபிடிப்பவர்களுக்கு இன்னல்கள் ஏற்படும் போது மக்களுக்கு பல்வேறு விதமான ஸ்ரமங்கள் ஏற்படும் காலத்திலே, எல்லாம் வல்ல இறைவன், கருணா மூர்த்தியாக இருக்கக் கூடியவர், மனித உருவத்திலே வந்து, இந்த பூவுலகத்திலே வந்து, அவதாரம் செய்து, மக்களைக் காப்பாற்றி அருள்பாலிக்கிறார்.



தசாவதாரங்களின் வரிசையிலே கிருஷ்ணாவதாரமானது ஏற்பட்டது. மக்களை நல்ல உபதேசங்கள் மூலமாக நல்வழிப்படுத்தி, இறைவன் குருவாகவும் திகழ்கிறார். ஜகத் குருவாகவும் திகழ்கிறார். அதுதான் கிருஷ்ண அவதாரத்தின் தனிச் சிறப்பு. இன்னல்களைப் போக்கி, இடர்பாடுகளைப் நீக்கி, ஹிம்சை அளித்தவர்களை அழிக்க ஏற்படுவதே இந்த அவதாரங்களின் நோக்கம்.

இந்த கிருஷ்ணாவதாரத்திலே, பகவத்கீதையின் மூலமாக மனிதன் நாகரீகம் வளர்வதற்கான தெளிவான உபதேசங்களை அளித்திருக்கிறார். மனிதப் பிறவி என்பது இறைவனின் அருளால் நமக்கு கிடைக்கக் கூடிய ஒரு வரபிரசாதம். இந்த அரிய பிறவியிலே இறைவனுடைய தத்துவங்களை நாம் அறிய முற்ப்பட வேண்டும். இந்தப் பிறவியானது புனிதப் பிறவியாக உயர்வதற்கு நம்மால் முடிந்த பரோபகாரங்களை நாம் செய்ய வேண்டும். பிறருக்கு நாம் உதவி செய்ய வேண்டும்.

பசி போக்குவதற்கு, தாகம் போக்குவதற்கு, அறியாமையை போக்குவதற்கு; அதே போன்று சேவை மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும். முதியவர்களை நல்ல விதமாக கவனித்துக் கொள்ள வேண்டும். குரு பக்தியுடன் கல்வியை கற்க வேண்டும்.

மனிதப் பிறவியிலே நாம் தெய்வ பக்தியை வளர்த்துக் கொள்ள வேண்டும். இதற்கு சத்சங்கம் என்பது தேவை. நல்லோர்களுடன் சேர்க்கை. மனிதப் பிறவி சாஸ்வதம் இல்லை என்றாலும், சாஸ்வதமான புண்ணியத்தை அளிக்கக் கூடியது, மனிதப் பிறவி சாஸ்வதம் இல்லை என்றாலும், மனிதப் பிறவியின் மூலமாக செய்யக் கூடிய நற்செயல்கள், சாஸ்வதமான புண்ணியத்தை, நிரந்தரமான ஈஸ்வரனுடைய, பெருமாளுடைய அனுக்ரகத்தைப் பெற்று தரக்கூடியது.

ஆகவே, இளமையில் கல், அறம் செய்ய விரும்பு, ஆலயம் தொழுவது சாலமும் நன்று. இது போன்ற பல அறிவுரைகளை தமிழகம் நமக்கு அளித்து இருக்கிறது. உலகளவிலே பொது மறையாகக் கருதக் கூடிய பகவத்கீதையை கிருஷ்ண பரமாத்மா நமக்கு அளித்து இருக்கிறார். அந்த கிருஷ்ண பரமாத்மாவின் உபதேசம், இன்றைய நிலையிலே உலகணைத்திற்கும் தேவையான ஒன்றாக இருக்கிறது. ஏனென்றால், மனிதர்கள் மனித நேயத்துடன் பழக வேண்டும், மனித நாகரீகத்தோடு பழக வேண்டும், நம்பிக்கையோடு பழக வேண்டும், அனைவரும் நல்லிணக்கத்தோடு பழக வேண்டும்.

**புனரபி ஜனனம் புனரபி மரணம்**
**புனரபி ஜனனி ஜடரே சயனம்**

என்று ஆதிசங்கரர் பஜகோவிந்தத்தில் குறிப்பிடுவது போன்று, நாம் பல பிறவிகளை எடுத்து வருகிறோம். அந்த பல பிறவிகளிலும் நல்ல பணிகளை செய்வதற்கு, நாம் முற்படுவதற்க்கு அந்த இறைவனுடைய அருள் என்பது மனித சமுதாயத்திற்க்கு மிகவும் தேவையான ஒன்று. ஆகவே, நல்ல வாழ்க்கை நமக்கு அமைவதற்கு, நல்ல சிந்தனைகள் அமைவதற்கு, நல்ல நண்பர்கள் அமைவதற்கு, பொருளாதாரம் சிறப்பான முறையில் அமைவதற்கு, வேலை வாய்ப்புகள் சிறப்பான முறையிலே அமைவதற்கு இறைவன் அருள் நமக்குத் தேவை. அவர் படைத்த பொருட்களை நாம் சரியான முறையிலே பகிர்ந்து கொண்டு, அனைவருக்கும் உதவி செய்து, தியாகமும், சேவையும், அன்பும் கலந்த வாழ்க்கையை அமைத்துக் கொண்டு, நாமும் இன்பமாக வாழ்ந்து, நம்மைச் சார்ந்தவர்களும் இன்பமாக வாழ்வதற்கு, ஆனந்தமாக வாழ்வதற்கு, அன்புடன் வாழ்வதற்கு வேண்டிய நல்லதொரு வழிமுறைகள்- ஆசாரக் கோவை போன்று திருக்குறள் போன்ற புஸ்தகங்களைப் படித்து, நல்ல தன்மையைத் தரக் கூடிய வாழ்க்கையை, நல்ல நன்மையைத் தரக்கூடிய நாம் அமைத்துக் கொள்ள வேண்டும்.

இதெற்கெல்லாம் எடுத்துக்காட்டாக, வாழ்க்கையிலே ஒளி வெள்ளம் ஏற்பட வேண்டும். பிரகாசம் ஏற்பட வேண்டும். ஜோதி, பிரகாசம் ஏற்படுவதற்கு, இந்த

*தீபாவளிப் பண்டிகை உதாரணமாகத் திகழ்கிறது.*

*கிருஷ்ண பரமாத்வாவினால் ஆரம்பிக்கப்பட்ட, அனுக்ரஹிக்கப்பட்ட, ஆசீர்வதிக்கப்பட்ட, தீபாவளி நரகசதுர்த்தசி புண்ய காலத்திலே அனைவரும் காலையிலே நீராடி, லக்ஷ்மி கடாக்ஷத்தையும், கங்கை நதியிலே ஸ்நானம் செய்த புண்ணியத்தையும்* ***-தைலே லக்ஷ்மீ, ஜலே கங்கா*** *என்று சொல்வார்கள். அன்றைய தினம் கங்கா ஸ்நானம் ஆகி விட்டதா என்று பரஸ்பரம், குசலம் விசாரித்துக் கொள்வார்கள். அப்படி புனிதத் தன்மையை, எங்கேயோ இருக்கக் கூடிய, இமய மலையிலே இருக்கக் கூடிய புனிதமான கங்கையிலே நீராடிய, ஸ்நானம் செய்த புண்ணியத்தை, நாம் தமிழகத்தில் இருந்தும் சரி, வெளிநாட்டில் இருப்பவர்களும் சரி, அன்றைய தீபாவளி தினம், புனித நீராடுதல் மூலமாக, நாம் அந்த கங்கா ஸ்நானத்தின் புண்ணியத்தைப் பெறுகிறோம். லக்ஷ்மியின் கடாக்ஷத்தை, செல்வத்தைப் பெறுகிறோம். இப்படி அருளையும், பொருளையும் பெற்று, நம்முடைய நாடு மற்றும் உலகம் மேலும் சிறப்பாக விளங்குவதற்கு, எல்லாம் வல்ல அந்த கிருஷ்ண பரமாத்வாவையும், அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும் அன்னை காமாக்ஷி என்கிற காமாக்ஷி அம்மனையும் பிரார்த்தனை செய்வோம்.*

***ஹர ஹர சங்கர ஜெய ஜெய சங்கர***

ஜய ஜய சங்கர உ ஹர ஹர சங்கர

ஸ்ரீ

தர்மோ ரக்ஷதி ரக்ஷித:

# ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

## சீடர்களின் கவனத்திற்கு

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின்
சீடர்களாகிய நாம் நமது குடும்பத்தில் அவ்வப்பொழுது நடைபெறும்
சுபநிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகள் தயார் செய்யும்போது
கீழ்க்கண்ட வாசகங்களை முதலில் அமைப்பது சாலச்சிறந்ததாகும்.

**‘‘ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன்,
ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம்
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய
ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன்**

# ப்ரஹ்மவித் ஆசீர்வாதம்

## ஸ்ரீ வித்யாரண்ய ஸ்வாமிகள்

பி. ஆர். கண்ணன்

ஒவ்வொரு வாக்யம் முடிந்தவுடன் **ஸ்ரீ சரணா: அனுக்ருண்ணந்து** என்று சிஷ்யர்கள் கூறுவது ஸ்ரீ மடத்து ஸம்ப்ரதாயம்.

**நிரவயத்வேன அஸங்கத்வேன ச ஆத்மன: கேனாபி ஸம்பந்த அபாவாத் ஆத்மா நித்யமுக்த இதி நித்யமுகதஸ்வரூப ஆத்மானுபவ: ஸம்யக் பூயாத்॥** *50*

*அவயவம் இல்லாததும், அஸங்கமாயிருப்பதும், ஆத்மா நித்ய முக்தனாயுள்ளது. அந்த நித்யமுக்த ஆத்ம ஸ்வரூபம் எனக்கு நன்றாக அனுபவமாகட்டும்.*

**அவேத்யத்வே ஸதி அபரொக்ஷ அவ்வ்யவஹார யோக்யத்வாத் ஆத்மா ஸ்வப்ரகாச இதி ஸ்வயம்ப்ரகாச ஆத்மானுபவ: ஸம்யக் பூயாத்॥** *51*

*வேறு எதனாலும் ஆத்மானுபவத்தை அறிய முடியாது. ஆத்மா அபரோக்ஷமானது. நேருக்கு நேர் தெரியக் கூடியது. ஸ்வப் ப்ரகாசமாக இருப்பது. அந்த ஸ்வப்ரகாச ஆத்மானுபவம் எனக்கு நன்றாக ஏற்படட்டும்.*

**ஸாதனாந்தர நிரபேக்ஷதயா ஸ்வயமேவ பாஸமானத்வாத் ஆத்மா ஸ்வயம்ப்ரகாஸ இதி ஸ்வயம்ப்ரகாச ஆத்மானுபவ: ஸம்யக் பூயாத் ॥** 52

*வேறு எந்த பொருளையும் எதிர்பாராமல் தானே ஸ்வப்ரகாசமாயிருக்கும் ஆத்மானுபவம் நன்றாக விளங்கட்டும்.*

**இதம் ஸர்வம் ஆத்மனி ப்ரதீயமானம் யத் ரூபரஸாதிகம் ஜகத் மாயாமயம் ந த்வேதத் வஸ்துதோ அஸ்தீதி தத்வ நிச்சாயோ த்ருடீ பூயாத்॥** 53

*ரூப ரஸத்தினாலான இந்த பார்க்குமுலகம் மாயாமயம். உண்மையில் இல்லாதது என்னும் தத்வ நிச்சயம் திடமாகட்டும்.*

அயமாத்மா ஸ்தூலதேஹ ரூபோ வா ஸூக்ஷ்மதேஹரூபோ வா அதிரிக்தத்வேபி அணுபரிமாணோ வா மத்யமபரிமாணோ வா ஸர்வகதோ வா ஜடோ வா த்ரவ்ய போதாத்மகோ வா சித்ரூபோ வா ஈஸ்வராதன்யோ வா ஈஸ்வர ஏவ வா ப்ரபஞ்ஜ ஸத்யோ வா மித்யா வா மோக்ஷஸாதனம் கர்மாணி வா ஞ்யானம் வா இத்யாதிகானாம் ஸம்சயானாம் நிவ்ருத்திர் பூயாத் ॥ 54

*இதி பரமஹம்ஸ பரிவ்ரஜ்காசார்ய ஸ்ரீ வித்யாரண்ய முனி விரசிதா ப்ரஹ்மவித் ஆசீர்வாத பத்ததி: ஸம்பூர்ணம்.*

*இந்த ஆத்மா ஸ்தூல ரூபமா, நுண்ணிய ரூபமா, அணுபரிமாணமா, மத்யம பரிமாணமா, எங்குமிருப்பதா, ஜடமா அல்லது த்ரவ்யமா, போதுமானதா அல்லது சித் ரூபமா ஈஸ்வரனா ! ஈஸ்வரனிடமிருந்து அன்யமா இந்த ப்ரபஞ்சம் ஸத்யமா! மித்யையா மோக்ஷஸாதனம் கர்மாவினாலா ஞானத்தாலா இப்படி எழும் ஸந்தேஹகங்கள் அனைத்தும் நம்மை விட்டுப் போகட்டும்.*

*இப்படி பரமஹம்ஸ பரிவ்ராஜக ஆசார்யரான ஸ்ரீ வித்யாரண்ய ஸ்வாமிகளின்*
*ப்ரம்மவித் ஆசீர்வாத பத்ததி ஸம்பூர்ணம்*

---


## வேத ரக்ஷண நிதிக்கு பணம் அனுப்ப வேண்டிய தகவல்கள்
## VEDA RAKSHANA NIDHI TRUST

**ICICI Bank** T. Nagar, Chennai 17, A/C. No. 602 601205 431

**IFSC Code :** ICIC 0006026

**Bank of Baroda** A/C No. 05320100002089 IFSC CODE barb0chenbs

**Indian Bank,** West Mambalam A/C. No. 418622532 IFSC IDIB 000w005

**Canara Bank,** West Mambalam A/C No. 0917101041732 IFSC CNRB 0002616

**Indian Bank** Mutt Branch, Kancheepuram
A/C No. 411552514 IFSC IDIB b0005085

பண உதவி செய்பவர்கள் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் அனுப்பலாம். செலுத்துபவர் அவருடைய Pan No ஐயும், கோத்ரம், நக்ஷத்ரம், செல் போன் எண் முதலியவைகளை ட்ரஸ்டுக்குத் தெரிவிக்கவும்.

# மார்கழி மாதம்
# ஸ்ரீ மடத்தில் - விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விபரம் |
|---|---|---|
| 17-12-2022 | சனி | தனுர் மாத பூஜாராம்பம் |
| 18-12-2022 | ஞாயிறு | ஆதித்ய ஹஸ்தம் |
| 19-12-2022 | திங்கள் | ஸ்வாதி வேத பாராயணம் ; ஏகாதசி |
| 20-12-2022 | செவ்வாய் | ஸ்ரீகாஞ்சி பரமகுரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள் வார்ஷிக ஆராதனை ; த்வாதசி |
| 21-12-2022 | புதன் | ப்ரதோஷ பூஜை; சாய்ன உத்தராயண புண்யகாலம் |
| 21-12-2022 | புதன் | அனுஷம் வேத பாராயணம் ; அனுஷம் தேர் |
| 23-12-2022 | வெள்ளி | மூலம் வேத பாராயணம் ; மூலம் தேர் ; ஹநுமத் ஜயந்தி |
| 25-12-2022 | ஞாயிறு | உத்ராடம் வேத பாராயணம் ; உத்ராடம் தேர் |
| 26-12-2022 | திங்கள் | அவிட்டம் தேர், சோம ஸ்ரவண யோகம் |
| 27-12-2022 | செவ்வாய் | அவிட்டம் வேத பாராயணம் |
| 28-12-2022 | புதன் | மஹாவ்யதீபாதம் |
| 30-12-2022 | வெள்ளி | ப்ருகு ரேவதி |
| 02-01-2023 | திங்கள் | வைகுண்ட ஏகாதசி |
| 03-01-2023 | செவ்வாய் | த்வாதசி |
| 04-01-2023 | புதன் | ப்ரதோஷம் |
| 06-01-2023 | வெள்ளி | ஆருத்ராதரிசனம் ; பௌணர்மி பூஜை |
| 14-01-2023 | சனி | தனுர் பூஜா பூர்த்தி ; போகி பண்டிகை |
| 16-12-2022; 23-12-2022; 30-12-2022; 06-01-2023; 13-01-2023 வெள்ளிக்கிழமை பூஜை | | |

# ஸ்ரீமத் தேவி பாகவதம் - 26

பி. ஆர். கண்ணன்

**பரீக்ஷித்தின் தேவி ஸாயுஜ்யம்**

வ்யாஸ பகவான் ஜனமேஜயருக்கு இவ்வாறாக ஸ்ரீமத் தேவி பாகவதத்தை உபதேசித்து பூர்த்தி செய்ய முற்படுகையில், ஸ்ருத்வைதத்து **மஹாதேவ்யா: புராணம் பரமாத்புதம் ந க்ருதக்ருத்யோ பவேந்மர்த்யோ தேவ்யா: ப்ரியதமோ ஹி ஸ: ।।** என்றார். அதாவது, மஹாதேவியின் இந்த உயர்ந்த அதிஅத்புதமான புராணத்தை எவன் ஸ்ரவணம் செய்கிறானோ, அவன் மனுஷ்ய ஜன்மா எடுத்ததன் பலனை அடைந்தவனாகிறான். அவன் தேவியின் ப்ரியத்துக்கு பாத்திரமானவர்களில் தலைசிறந்தவன். ஜனமேஜயர் தேவி ப்ரணவ தீக்ஷையை வ்யாஸரிடமிருந்து பெற்று, நவராத்ரியின் போது தௌம்யர் முதலான மஹரிஷிகளைக் கூப்பிட்டு தேவி யக்ஞத்தை வ்யாஸரின் உபதேசப்படி சிறந்த முறையில் நடத்தினார். தேவி பாகவத பாராயணம், ஹோமம், ஸுவாஸினி, வடு, குமாரி பூஜைகள், அதிதிபோஜனம், சிறந்த தக்ஷிணையுடன் யக்ஞம் மிக விமரிசையாக நடந்தேறியது. அப்போது நாரத மஹரிஷி தன் மஹதி வீணையை வாசித்துக் கொண்டு தன் தேஜஸினால் ஜ்வலித்துக் கொண்டு அங்கு வந்தார். அவர் ஜனமேஜயரிடம் சொன்ன வார்த்தைகள் அதி ஆச்சரியமானவை. 'தங்கள் பிதா பரீக்ஷித், துர்க்கதியிலிருந்தவர், திவ்யசரீரத்துடன் தற்போது மணித்வீபத்தை அடைந்ததை நான்



என் கண்ணால் பார்த்தேன்.' **தேவீபாகவதஸ்யாஸ்ய ஸ்ரவணோத்தபலேந ச । அம்பாமகபலேநாபி பிதா தே ஸுகதிம் கத: ॥**

**தந்யோஸி க்ருதக்ருத்யோஸி ஜீவிதம் ஸபலம் தவ ந நரகாதுத்த்ருதஸ்தாத: த்வயா து குலபூஷண ॥ தேவலோகே ஸ்பீதகீர்தி: தவாத்ய விபுலாபவத் ॥**

'நீ தேவிபாகவதத்தை ஸ்ரத்தையுடன் ஸ்ரவணம் செய்ததினாலும், அம்பாயக்ஞத்தை நன்கு நடத்தியதன் பலனாகவும், உன் வாழ்க்கை முழு பலனையும் பெற்றுவிட்டது. நீ புண்யவான், செய்யவேண்டியதைச் செய்து முடித்தவன். உன் தகப்பனார் நரகத்திலிருந்து உன்னால் காப்பாற்றப்பட்டார். உன் குலத்திற்கே அணிகலனாக இருக்கின்றாய். தேவலோகத்தில் உன் கீர்த்தி பல்கிப்பெருகி, தேவர்கள் உன்னைப் போற்றுகின்றனர்.' என்று நாரதர் சொன்னதைக்கேட்ட ஜனமேஜயர் புளகாங்கிதம் அடைந்தார்.

### க்ரந்த பூர்த்தி

அப்போது அங்கு வந்திருந்த வ்யாஸ பகவானிடம் ஜனமேஜயர் சொன்னார்: **தவாநுக்ரஹதோ தேவ க்ருதார்த்தோஹம் மஹாமுநே । கிம் மயா ப்ரதிகர்தவ்யம் நமஸ்காராத்ருதே தவ** ॥ 'தேவரே, மஹாமுனிவரே, தங்கள் அனுக்ரகத்தினால்தான் நான் என் கடமையைச் செய்ய முடிந்தது. தங்களுக்கு நான் என்ன பதில் கைம்மாறு செய்வேன்; நமஸ்காரம் ஒன்றே செய்யமுடியும்.' வ்யாஸர் ஆசிகளை வாரி வழங்கி, தேவிபாகவத பாராயணம், யக்ஞம் இவைகளை விடாமல் தொடர்ந்து செய்யுமாறு பணித்தார். **பாடே வேதஸமம் புண்யம் யஸ்ய ஸ்யாஜ்ஜநமேஜய । படிதவ்யம் ப்ரயத்நேந ததேவ விபுதோத்தமை: ॥** 'ஜனமேஜயனே, இப்புராணம் படிப்பவருக்கு வேதத்திற்கு ஸமமான புண்யத்தைத் தரவல்லது. ஆகையால் உயர்ந்த ஞானிகள் எப்போதும் முழுமுயற்சியுடன் இதனைப் படிக்க வேண்டும்' என்று அனுக்ரகித்து தன் இருப்பிடத்திற்குச் சென்றார்.

கதையைக் கூறிமுடிக்கையில், **ஸூதபௌராணிகர், சௌனகாதி முனிவர்களிடம், தேவியின் அரை ஸ்லோகம், ஸர்வம் கல்விதமேவாஹம் நாந்யதஸ்தி ஸநாதநம்**, அதாவது, இங்கு காண்பது எல்லாமே நான்தான், வேறு ஒரு வஸ்துவும் இல்லை. வேறு ஒன்றும் நிலையானதல்ல என்ற இந்த அரை ஸ்லோகத்தைக் கொண்டு, ப்ரம்மதேவர் 100 கோடி ஸ்லோகங்கள் கொண்ட க்ரந்தத்தைச் செய்தார். வ்யாஸர் அதனைச் சுருக்கி, 18000 ஸ்லோகங்கள் கொண்ட க்ரந்தத்தைச் செய்து அனுக்ரஹித்து சுகருக்கு

உபதேசித்தார். பலஸ்ருதியையும் அருளினார். **நாநேந ஸத்ருஸம் புண்யம் பவித்ரம் பாபநாஸநம் । பதே பதேஸ்வமேதஸ்ய பலமாப்நோதி மாநவ: ।।**

**நித்யம் ய: ஸ்ருணுயாத்பக்த்யா தேவீபாகவதம் பரம் । ந தஸ்ய துர்லபம் கிஞ்சித் கதாசித் க்வசிதஸ்தி ஹி ।।**

இப்புத்தகத்திற்கு சமமான புண்யம் தருவதும், பவித்ரமானதும், பாபங்களை அழிக்கக்கூடியதும் வேறு ஒரு க்ரந்தம் கிடையாது. ஒவ்வொரு அடியிலும் அஸ்வமேத யாக பலனைத் தரவல்லது. தினமும் தேவிபாகவதத்தை பக்தியுடன் ஸ்ரவணம் செய்பவனுக்கு அடையமுடியாதது என்று எதுவும், எங்கும், எப்போதும் இல்லை. விசேஷமாக புத்ரன், பொருள், வித்யை, கீர்த்தி முதலான எல்லாம் சுலபமாக கிடைக்கும். தேவியை ஸ்மரித்து இந்த மந்த்ரமயமான ஸ்லோகத்தை அவர் சொன்னார்.

**ஸச்சிதாநந்தரூபாம் தாம் காயத்ரீப்ரதிபாதிதாம் । நமாமி ஹ்ரீம்மயீம் தேவீம் தியோ யோ ந: ப்ரசோதயாத் ।।**

ஸச்சிதானந்த ரூபமாகவும், காயத்ரி மந்த்ரத்தினால் சுட்டிக்காட்டப்படுபவளும், ஹ்ரீம் என்கிற மூலமந்த்ர வடிவாகவும் உள்ள தேவியை வணங்குகிறேன். ஸ்மரிக்கும் நம்மை அவள் காப்பாளாக, என்று சொல்லி ஆனந்தபரவசத்துடன் ஸூதர் அகன்றார்.

இக்க்ரந்த ஆரம்பத்தில்

**ஓம் ஸர்வசைதந்யரூபாம் தாம் ஆத்யாம் தேவீம் ச தீமஹி ந புத்திம் யா ந: ப்ரசோதயாத் ।।** என்ற தேவி மந்த்ரம் உபதேசிக்கப்பட்டது. அதேபோன்ற வேறொரு மந்த்ர மூலமாக தேவியைப்பற்றின உபதேசம் இப்போது நமக்கு கிடைக்கிறது. சித் (சைதன்யம்) என்கிற தேவியின் ஞானரூபத்திலிருந்து ஆரம்பித்து, ஆனந்தரூபத்தை நாம் இப்போது அடைகிறோம். அதற்கு உறுதுணையாக, மந்த்ர உபதேசம் பெறக்கூடியவர்கள் காயத்ரி மந்த்ரத்தையும், ஹ்ரீம் என்கிற பீஜமந்த்ரத்தையும் குருமுகமாக உபதேசம் பெற்று, மற்றவர்கள் தேவி ஸ்தோத்ரங்களைச் சொல்லி, தேவி ஸ்மரணையினாலேயே இஹ பர சௌக்கியங்களை, தேவிஸாயுஜ்யம் உள்பட எல்லா பலன்களையும் பெறுவோமாக.

சுபம்.

# சாணக்ய ஸுபாஷிதம்

## உலக இயல்

### லக்ஷியம்

**தர்மார்த காம மோக்ஷாணாம் யஸ்யைகோபி ந வித்யதே**

**அஜாகலஸ்தனஸ்யேவ தஸ்ய ஜன்ம நிரர்தகம் ॥**

*அறம், பொருள், இன்பம், வீடு இந்த நான்கில் எந்த ஒன்றாவது இல்லாத மனிதனின் வாழ்க்கை ஆட்டுக்குத் தொங்கும் மாம்ஸம்போல் வீண்.*

### மூன்று ரத்னங்கள்

**ப்ருதிவ்யாம் த்ரீணி ரத்னானி ஜலமனஜம் ஸுபாஷிதம்**

**மூடை: பாஷாணகண்டேஷு ரத்ன ஸம்க்யா விதீயதே ॥**

*உலகில் நீர், தான்யம், நல் வார்த்தை என்ற மூன்று ரத்னங்கள் உள்ளன. இவைகளை விட்டு வெறுங் கற்களை மூடர்கள் ரத்னம் என்று கொண்டாடுவர்.*

### கசப்பு உலகில் இனிப்புகள்

**ஸம்ஸார கடு வ்ருக்ஷஸ்ய த்வே பலே ஹி அம்ருதோபமே**

**ஸுபாஷிதஸ்ச ஸுஸ்வாது ஸம்கதி; ஸுஜனை: ஸஹ ॥**

*இவ்வுலக மரம் கசப்புதான். ஆனாலும் அமிழ்தத்திற்கொப்பான இரு பழங்களை ஈயும் நல்லோர் சேர்க்கை, நல்லோர் சொல் என்பதே அவை.*

### உண்மை அணிகலங்கள்

**குணோ பூஷயதே ரூபம் சீலம் பூஷயதே குலம்**

**ஸித்திர் பூஷயதே வித்யாம் போகோ பூஷயதே தனம் ॥**

*ரூபத்திற்கு அணி குணம், குலத்திற்கு அணி சீலம், வித்யைக்கு அணி சித்தி, அனுபவித்தல் செல்வத்திற்கு அணி.*

**பெருமை**

**குணைருத்தமதாம் யாந்தி ந உச்சைராஸன ஸம்ஸ்திதை:**

**ப்ராஸாதசிகரஸ்திதோபி காக: கிம் கருடாயதே ॥**

*உத்தமம் வருவதற்கு குணங்களே காரணம். உயந்த இடத்தில் இருப்பதல்ல. அரண்மனையின் மேலே இருக்கும் காக்கை கருடனாகுமா?*

**உண்மை பரிசோதனைகள்**

**யதா சதுர்பி;கனகம் பரீக்ஷ்யதே நிகர்ஷண சேதன தாப தடனை:**

**ததா சதுர்பி; புருஷ: பரீக்ஷ்யதே த்யாகேன சீலேன குணேன கர்மணா ॥**

*கனகம் எப்படி உரசல், அடித்தல், சூடாக்குதல், உடைத்தல் இவைகளால் சோதிக்கப்படுமோ அதே போல் புருஷனும் த்யாகம், சீலம், குணம், கர்மம் இவைகளால் சோதிக்கப்படுகிறான்.!*

**சிறு துளி பெரு வெள்ளம்**

**ஜலபிந்து நிபாதேன க்ரமஸ: பூர்யதே கட:**

**ஸ ஹேது: ஸர்வவித்யானாம் தர்மஸ்ய தனஸ்ய ச ॥**

*சிறு துளிகளால் பெரும் குடம் நிரம்பும். கல்வியும், தனமும், தர்மமும் அவ்வாறே பெறப்படும்.*

**நிகரில்லாதவை**

**நாஸ்தி மேகஸமம் தோயம் நாஸ்தி சாத்மஸமம் பலம்**

**நாஸ்தி சக்ஷுஸமம் தேஜோ நாஸ்தி சான்னமயம் ப்ரியம் ॥**

*மழை நீருக்கு ஒப்புண்டோ! ஆத்மபலத்திற்கு ஒப்புண்டோ ! பார்வைக்கு ஒப்புண்டோ! அன்னத்தைவிட ப்ரியத்திற்கு ஒப்புண்டோ !*

**வீண்**

**ஸ ஜீவதி குணோ யஸ்ய யஸ்ய தர்ம: ஸ ஜீவதி**

**குணதர்ம விஹீனஸ்ய ஜீவிதம் நிஷ்ப்ரயோஜனம் நச**

*யாருக்கு குணமும், அறமும் உள்ளதோ அவந்தான் உண்மையில் ஜீவிக்கிறான். இவை இல்லாதவனுடைய ஜீவிதம் வீண்.*

ப்ரதீபப் பேழை

# சங்கர கீதை

ர. வேங்கடரத்தினம்

தந்தை எவர், தாய், எவள் என்று விசாரணை செய்யுமாறும் ஆசாரியர் அடுத்தாற்போல் பணிக்கிறார்.

कस्त्वं कोऽहं कुत आयात: का मे जनमी को मे तात: ।
इति परिभावय सर्वमसारं बिश्वं त्यक्त्वा स्वप्नविचारम् ।।

**கஸ் த்வம் கோஹம் குத ஆயாத: கா மே ஜநநீ கோ மே தாத: ।**
**இதி பரிபாவய ஸர்வமஸாரம் விஸ்வம் த்யக்த்வா ஸ்வப்நவிசாரம் ।।**

இங்கும் ஆதி ஆசாரியர் பழையபடி உலகத்து உறவுகளை உன்னிப் பார்க்கச் சொல்கிறார். நீ யார், நான் யார் என்றெல்லாம் ஆராயச் சொல்லுகிறார்.

கனவுக்கு இணையான, ஸாரமற்ற இந்த ஏழு உலகையும் விடுத்து, என் தந்தை யார், தாய் எவள் என்று ஆய்ந்தறிவாயாக.

பெற்றவர்களை இழித்தோ, பழித்தோ ஆசாரியர் கூறுவதாக எண்ணுவோர் கீதையைப் படிக்க வேண்டும். ஐயன் இங்கு உலகத்திற்குத் தந்தை, தாய், பாட்டன் எல்லாம் தாமே எனக் கூறுவார்.

पिताहमस्य जगतो माता धाता पितामह: ।

**பிதாஹமஸ்ய ஜகதோ மாதா தாதா பிதாமஹ: ।**

வையகத்தின் தோற்றுவாய் இறைவன்; பேணி உயிர்களை ஓம்புவதும் இறைவனே. வாழ்க்கை நடக்க அனைத்தும் அள்ளித் தருவதும் இறைவனே. தந்தை தாய்க்கும் முந்திய முப்பாட்டனாரும் ஈசுவரனே.

எனவே, பகவத்பாதர் கேட்பது, “ நீ தந்தை என்றும் தாய் என்றும் நினைத்திருக்கிறாயே. அவர்களுக்கெல்லாம் மேலான, அவர்களுக்கும் சேர்த்து ஒரு தாயும் தந்தையுமாய் உள்ள சர்வேசுவரனை எண்ணிப் பார்த்தாயா” என்பது போல் உள்ளது.

கண் திறந்த பின்னர் அர்ஜுனன், பகவான் பகர்ந்ததைத் திருப்பிச் சொல்வான்.

पितासि लोकस्य चराचरस्य त्वमस्य पूज्यश्च गुरुर्गरीयान् ।

**பிதாஸி லோகஸ்ய சராசரஸ்ய த்வமஸ்ய பூஜ்யஸ்ச குருர் கரீயாத் ।**

அசைவன, அசையாதன ஆகிய அனைத்தும் அடங்கிய இந்த உலகினுக்குத் தாங்களே தந்தை; பெருமைக்கு உரிய குருவாகவும் விளங்குகிறீர்கள்.

பார்த்தனுக்கு உண்டான இந்த ஞானோதயத்திற்கு அடிகோலுவதுதான் ஆசாரியரின் கேள்வி. நமக்கும் உண்மை உறவுகள் பிடிபட வேண்டும் என்னும் கருணையிற் பிறந்த ச்லோகங்கள் மேலே உள்ளவை.

அறிவை ஆசாரியர் அரிவாளாகக் கூறியுள்ள சுலோகம் தந்யாஷ்டகத்தில் வரும். கத்தி போன்ற எதையும் கரத்தில் பற்றாத ஞானத் துறவியாக பகவத்பாதர் ஞானத்தை வாளென உவமித்து அருளியது அதிசயமாகத் தோன்றும்.

अज्ञानपङ्कपरिमग्नमपेतसारं
दुःखालयं मरणजन्मजरावसक्तम् ।
संसारबन्धनमनित्यमवेक्ष्य धन्या
ज्ञानासिना तदवशीर्य विनिश्चयन्ति ।।

**அஜ்ஞா நபங்கபரிமக்நமபேதஸாரம்**
**து: காலயம் மரணஜந்மஜராவஸக்தம் ।**
**ஸம்ஸாரபந்தநமநித்யமவேக்ஷ்ய தந்யா**
**ஜ்ஞாநாஸிநா ததவஸீர்ய விநிஸ்சயந்தி ।।**

வாழ்க்கைத் தளைகளை அழிபவை எனக் கண்டுகொண்டு அதனை அறிவென்னும் கொடுவாளினால் அறுத்துத் தள்ளி உறுதி பெறுகிறவர்கள் கொடுத்து வைத்தவர்கள் ! முதல் இரண்டு அடிகள் உலக வாழ்க்கையின் இழிந்த தன்மையைக் கூறுவன.

க்ஷத்திரியன் போல், வாள்வீச்சுப் பேசும் சூசாரியர் இந்த உவமையினைக் கண்ணன் வாசகத்திலிருந்தே எடுத்து ஆண்டுள்ளார். இதயத்தில் குடிபுகுந்துள்ள அறியாமையை வாள்கொண்டு வெட்டி, எட்ட எறியுமாறு பகவான் பகர்ந்துள்ளது ஞான, கர்ம, ந்யாஸ யோகத்துக் கடைசி ச்லோகத்திலாகும்.

तस्माद्ज्ञानसंभूतं हृत्स्यं ज्ञानासिनात्मनः ।
छित्त्वैनं संशयं योगमातिष्ठ भारत ।।

**தஸ்மா தஜ்ஞா நஸம்பூதம் ஹ்ருத்ஸ்தம் ஜ்ஞாநாஸிநாத்மந: ।**
**சித்தவைநம் ஸம்ஸயம் யோகமாதிஷ்டடோத்திஷ்ட பாரத ।।**

ஞானமெனும் வாள் கொண்டு, அறியாமையினால் மனத்தில் எழுந்துள்ள ஆத்மாவை ஒட்டிய சந்தேகத்தை வெட்டிச் சாய்த்து விட்டு, யோகம் பற்றி எழுந்து நில்.

சங்கர பகவத்பாதர் கீதையில் கண்ணபிரான் திருவாய்மலர்ந்தருளிய வண்ணம், அதே பாஷையில் பேசுகிறார். இல்லையேல், சத்துவத் துறவி க்ஷத்திரிய வாளைப் பற்றுவாரா? நந்தகம் என்ற வாளைக் கையில் ஏந்தி நிற்கும் திருமாலின் நந்தகீ என்னும் திருநாமத்திற்குப் பகவத்பாதர் விளக்கம் தருகையில், வித்யை என்னும் திருநாமத்திற்கு வாளை ஏந்தியவர் நந்தகீ என்று மொழிவார். (ஸங்கப்ருந் நந்தகீ சக்ரீ ஸார்ங்கதந்வா கதாதர: शङ्खभृन्नन्दकी चक्री शार्ङ्गधन्वा गदाधर: । என்பது விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில், திருமால் ஏந்தியுள்ள ஆயுதங்களை அறிமுகப்படுத்தும் வாக்கியமாகும்) அறிவை வாளோடு ஒப்பிடுகையில், கூர்மை என்னும் பொதுத்தன்மை நன்கு புரிகிறது !

ஆசிரியனைப் பேணிப் பணிவிடை செய்தல் ஞானிகளின் லட்சணங்களுள் ஒன்றாம். பதின்மூன்றாம் அத்தியாயத்தில் 7-ம் ச்லோகம் ஞானியரின் இலக்கணங்களைக் கூற முற்படும். தற்பெருமையின்மை, வீண் பகட்டின்மை, அஹிம்சை, பொறுமை, நேர்மை, தூய்மை, ஊக்கம், அடக்கமுடைமை - இந்தப் பண்புகளுடன் ஆசாரிய சேவையும் கூறப்பட்டுள்ளது.

अमानित्वमदम्भित्वमहिंसा क्षान्तिरार्जवम् ।
आचार्योपासनं शौचं स्थैर्यमात्मविनिग्रह: ।।

**அமாநித்வமதம்பித்வமஹிம்ஸா க்ஷாந்திரார்ஜவம் ।**
**ஆசார்யோபாஸநம் ஸௌசம் ஸ்தைர்யமாத்மவிநிக்ரஹ: ।।**

இந்தப் பட்டியல் இன்னும் நான்கு ச்லோகங்கள் வரை தொடர்ந்து செல்கிறது. வாக்கியத்தில் பயனில்லை 11-ம் ச்லோகத்தில் உள்ளது. இவையெல்லாம் ஞானம் எனப்படும். செருக்கின்மை, அஹிம்சை, ஒழுக்கம் போன்ற நல்லியல்புகளுடன் ஒருசேரக் கூறப்படுகிறது. எழுத்தறிவித்தவனைப் போற்றுவதும், குருவைப் பணிந்து பணிவிடை செய்தல் சாரீரத் த்வம் என்று கூறப்படுவது அத்தியாயம் பதினேழிலாகும் देवद्विजगुरुप्राज्ञपूजनं தேவத்விஜகுருப்ராஜ்ஞபூஜநம் என்று கண்ணபிரான் 14ஆம் ச்லோகத்தில் தேவர், மறையவர், ஆசாரியன், அறிவாளிகளை வழிபடுதலை உடல்வழித்

தவம் என்பார். கீதை தோன்றிய சூழலை எண்ணிப் பார்க்கையில், இவ்வாக்கியத்தின் உட்கருத்து நெஞ்சைக் கிளறி பதறிப் போய் வில்லம்புகளை விடுத்து அமர்ந்தான். கண்ணபிரான் அவனுக்கு கடமையினை உபதேசித்து, யாராயினும் என்ன? நீ உன் பணியைப் புரிவாயாக என்றெல்லாம் கூறியருளி, இறுதியில், ஆசாரிய சேவை தவத்திற்கு ஒப்பாம் என்று முடிக்கிறார். அர்ஜுனன் தொடங்கிய இடத்தில் எங்கு அவன் கடமையைத் துறந்து நின்றானோ, அதே இடத்திற்குப் போய் விஷயம் நிறைவு பெறுகிறது. ஆசானை மாய்ப்பதா? என மருண்டு அவன் கேட்டான். இப்போது கண்ணபெருமான் அறிவை அவனுக்குப் புகட்டி, ஒரு சுற்றுச் சுற்றி வந்து, ஆசிரியனைப் பேணுவாயாக எனப் போதிக்கிறார். மாயக் கண்ணனின் மந்திரோபதேசம் மயக்கும் தத்துவோபதேசம் அல்லவா?

கீதாசாரியன் கூறிய வண்ணம் ஆசாரிய சேவை புரியுமாறு ஆதி ஆசாரியரும் கூறுகிறார். பஜகோவிந்தத்தின் கடைசியில் ஆசாரிய ஆஜ்ஞை வருமாறு உள்ளது.

गुरुचरणाम्बुजनिर्भरभक्तः संसारादचिराद् भव मुक्तः ।

**குருசரணாம்புஜநிர்பரபக்த: ஸம்ஸாரா தசிராத் பவ முக்த: ।**

இங்கே பகவத்பாதர், ஆசாரியர் ஒருவரைப் பற்றிக் கொள் என்று அருளுகிறார். அந்த ஆசானின் திருவடிகளைத் தாமரைகளாக எண்ணிப் போற்று; கட்டுக்கடங்காத பக்தியோடு வணங்கு. உலகினின்று விரைவில் வீடு பெறலாம். **ஆசார்யதேவோ பவ** என்ற பழைய மறைமுடி வாக்கியம் இங்கு ஆதி ஆசாரியர் வாக்காக வந்துள்ளது. குருவிற்கு உரிய ஸ்தானம் தனிப்பெருமை பொருந்தியது. கண்ணபிரானிடம் கலங்கிய உள்ளத்தினனாகிய பல்குனன், ஆசிரியர்களையும், தந்தையரையும், தனயர்களையும், பாட்டன்மாரையும், என் உயிர் போயினும், கொலை செய்ய ஒப்ப மாட்டேன் என்று கூறுவான். முதல் அத்தியாயத்தில் (ச் 34, 35) நம் ஆசாரியர் இந்தப் பாட்டன், இந்தப் பிள்ளை யார் என்றவாறு உறவுகளைக் கிள்ளிக் களையும் கேள்விகள் இடுகிறார். எங்குமே ஆசிரியர் என்பதெல்லாம் யார்? என்று ஆசாரிய பீடத்தைச் சிறுமைப்படுத்துகிறாப் போல எதுவுமே பேசவில்லை. ஞானாசிரியனின் பணி, மண்ணியல் உறவுகளை மீறியதாகும்.

**உண்டியைக் சுருக்கு**

மழை தான் உணவுப் பொருளைத் தோற்றுவிக்கிறது; உணவு தான் பல்லுயிர்களையும் காக்கிறது. இது யாவரும் அறிந்த உண்மை. அன்னம் இல்லையேல், அவனியில் ஜீவராசிகள் இரா.

अन्नाद्भवन्ति भूतानि पर्जन्यादन्नसंभवः ।

**அந்நாத் பவந்தி பூதாநி பர்ஜந்யாதந்நஸம்பவ: ।।**

என்பது பகவான் 3 - ஆம் அத்தியாயத்து, 14-ஆம் ச்லோகத்தில் இயற்கையின் இயக்கத்தை விளக்குகிற இடம் ஆகும்.


எனவே உணவின் இன்றியமையாமையைக் கடவுளே மறுக்கவில்லை என்பது தெளிவு. ஆனால், பரமனின் திருவாக்கில் பொலியும் உட்கருத்து வேறு. உயிர் வாழ்வதற்குத்தான் உணவு உண்ணுதல் வேண்டும்; அன்றி, உணவு உண்பதற்காக உயிர் வாழ்வதற்காக ஆகக் கூடாது.

ஆதி ஆசாரியர், கிடைத்ததை உண்டு வாழ்வாயாக எனக் கூறும் இடங்கள் அவருடைய கிரந்தங்களில் காணக் கிடைக்கும். சுவை மிகுந்த உணவை நாடாதே என்றும் அருளுவார். ஸோபான பஞ்சகத்தில் பகவத்பாதர், பசி என்ற நோய்க்கு உணவை மருந்தென்று மதிக்குமாறு பணிப்பார். சிகிச்சைக்கு மருந்து; பசி தீர ஆகாரம்.

(தொடரும்)

ஸ்ரீ சந்திரமௌலீஸ்வராய நம:

## ஸ்வர்ண ரத சேவா



ஸ்ரீ மடத்தில் ஸ்வர்ண ரத சேவை ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் பிருந்தாவனத்தில் ப்ரதி மாதம் கீழ்கண்ட நக்ஷத்ரங்களில் நடைபெறும்

♦ அனுஷம் ♦ மூலம் ♦ உத்ராடம் ♦ அவிட்டம்

இந்த சேவையில் ரூபாய் 1000 செலுத்தி உபயதாரர்களாக கலந்துகொள்ள விரும்பும் பக்தர்கள் ஸ்ரீமடம் அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புக்கு:**

ஸ்ரீமடம் மேனேஜர் - 044 - 27222115, 27222707, 27224236

இப்படிக்கு,
ஸ்ரீமடம் நிர்வாகம்

# முகாம் நிகழ்ச்சிகள்

சென்ற இதழ் தொடர்ச்சி

பிரம்ம சப்தாஹம் 02.11.2022 இன்று 6- ம் நாள் கிழக்கு கோதாவரி மாவட்டம் முக்காமலா கிராமத்தில் ஸ்ரீ மடம் முகாமில் நடைபெற்றது. இவ்வைபவத்தில் புஷ்பகிரி பீடாதிபதி ஸ்ரீ வித்யா சங்கர பாரதி சுவாமிகள் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். புஷ்பகிரி பீடமும் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்திற்கும் இடையிலேயான உறவு நூற்றாண்டு பழமையானது இதனை ஸ்ரீ சரணர்கள் தங்களது அனுக்கிரக பாஷணத்தில் நினைவு கூர்ந்தார்கள். வேதாந்த விற்பனர்களின் பாராயணம் மற்றும் உபன்யாசங்களும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

1937-ல் ஸ்ரீ மஹா ஸ்வாமிகள் முக்காமலா விஜய யாத்திரையின் போது எடுக்கப்பட்ட புகைப்படத்துடன் இன்றைய புகைப்படங்களுடன் திரு. சுப்பிரமணிய சாஸ்திரிகளின் நிகழ்வில் பகிர்ந்து கொள்ளப்பட்டது.

ஸ்ரீ ஆச்சார்ய சுவாமிகள் 1937-ல் பிரம்ம சப்தாஹம் நடைபெற்ற நூற்றாண்டு பழைமை வாய்ந்த இல்லத்தை பார்வையிட்ட போது இல்லவாசிகள் மற்றும் முக்காமலா கிராமவாசிகளுக்கும் நினைவுபடுத்தக்கூடியதாக அமைந்தது. பின்னர் ஸ்ரீ ஆச்சாரிய சுவாமிகள் சிவாலயத்திற்கு விஜயம் செய்து சுவாமிக்கு நாகாபரணம் அணிவித்தார்கள்.

புரோகித சபா உறுப்பினர்கள் பிரத்யேக நிகழ்ச்சியின் மூலமாக சுவாமிகளுக்கு மரியாதை செய்தார்கள்.

கோதாவரி கால்வாயில் ஸ்ரீ சுவாமிகளின் முன்னிலையில் திரு குமரேஷ் மற்றும் திருமதி ஜெயந்தி குமரேஷ் ஆகியோரின் இன்னிசை நடைபெற்றது.

ஸ்ரீ சுவாமிகள் 10.11.22 இரவு முக்காமலாவிலிருந்து த்ரக்ஷாராமம் யாத்திரை புறப்பட்டார்கள். வழியில் யனாம் என்ற இடத்தில் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் பக்தர்கள் ஸ்ரீ சுவாமிகளுக்கு பூர்ண



கும்ப மரியாதை செய்வித்தார்கள்.

10.11.22 முதல் 17.11.22 வரை த்ரக்ஷாராமம் என்ற இடத்தில் முகாம் நடைபெற்றது. ஆந்திர மாநிலம் கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் த்ரக்ஷாராமம் பஞ்சராம க்ஷத்திரங்களின் ஒன்றாகும்.

ஸ்ரீ மாணிக்யாம்பா சமேத ஸ்ரீ பீமேஷ்வர சுவாமி 13 அடி உயரமுள்ள சிவலிங்க வடிவில் அமைந்துள்ளது. பல்லாயிரம் வருடங்களாக த்ரக்ஷாராமம் கிராமத்தில் வழிபடக்கூடிய அனுக்கிரக கோவிலாகும்.

இது தற்போது புதைபொருள் ஆராய்ச்சி துறையினரால் பாதுகாக்கப்படுகிறது. ஸ்ரீ காஞ்சி மஹா சுவாமிகள் 1937லும், பின்னர் 1967 ல் பூஜ்ய ஸ்ரீ ஜெயந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகளுடனும் விஜயம் செய்துள்ளார்கள்.

த்ரக்ஷாராமம் என்னுமிடத்தில் தனியாரால் நடத்தப்படும் வேத பாடசாலையில் இதற்கு முன்னர் ஆச்சாரியர்களை அழைத்து கௌரவப்படுத்தி உள்ளது இவ்விடத்தில் வாரம் முழுவதும் தெய்வீக திருவிழா வாரமாக இருந்தது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் மூன்று கால ஸ்ரீ சந்திரமௌலீஸ்வரருடைய பூஜையை தரிசனத்துடன், ஆச்சார்ய சுவாமிகளையும் தரிசனம் செய்தார்கள். பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. ஸ்ரீ பீமேஷ்வர ஸ்வாமி சந்நிதியில் கிருத்திகா சோமவார பூஜை ஸ்ரீ மடத்தில் பூஜைகள் முடித்து ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளால் நடத்தப்பட்டது. பிரத்யேக அபிஷேக திரவியங்கள் உபயோகப்படுத்தப்பட்டது. திரயம்பக ஜப பாராயணத்துடன் விபூதி அபிஷேகமும் நடைபெற்றது.

செவ்வாய்க்கிழமை அன்று ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் வேதரூபகா கிராமத்திலுள்ள ஸ்ரீ விஜயதுர்கா ஆலயத்திற்கும், ராமச்சந்திரபுரம் நகரில் உள்ள ஸ்ரீ அகத்தீஸ்வர ஸ்வாமி கோவிலுக்கும் விஜயம் செய்தார்கள். மேலும் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமி பள்ளிக்கும் வரப்பெறவுள்ள தியாகராஜ சபா பகுதிக்கும் விஜயம் செய்தார்கள். புதாஷ்டமி தினத்தன்று ஸ்ரீ மாணிக்யாம்பா சந்நிதியில் பிரத்யேக பூஜைகள் திரிசதி, லலிதா சகஸ்ரநாமம், தேவி கட்கமாலா, லட்சுமி அஷ்டோத்திரம், லலிதா அஷ்டோத்திரம் ஆகியவை ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளால் நடத்தப்பட்டன. ஸ்ரீ பிமேஷ்வர ஸ்வாமிக்கு விசேஷ புஷ்பாஞ்சலியும் செய்விக்கப்பட்டு, ஸ்ரீ கால பைரவர் சந்நிதியில் தீபாராதனையும் நடைபெற்றது. இதற்கு முன்னதாக இதே நாளில் வைதீக புரோகித சபா நடைபெற்று சன்மானமும் வழங்கப்பட்டது. மூன்று கால பூஜைகள் முடித்த பின்னர் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள் பக்தர்களுக்கு இரண்டு மணி நேரங்களுக்கும் மேலாக தீர்த்த பிரசாதம் வழங்கினார்கள். இதையடுத்து பக்தர்களால் ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளுக்கு

புஷ்பாஞ்சலி செய்விக்கப்பட்டது. இதையடுத்து ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் கிராம தேவதை கோகுலம்மா கோவிலுக்கு விஜயம் செய்து பின்னர் மேற்கு கோதாவரி மாவட்டத்தில் உள்ள இரகாவரம் என்னும் இடத்திற்கு புறப்பட்டார்கள். யாத்திரை கிராம வீதிகள் வழியே சென்று ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி வேத பாடசாலையை அடைந்து வரவேற்பு நிகழ்வும் நடைபெற்றது.

இரகாவரம் கிராமத்தில் ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் 18.11.2022 முதல் 20.11.2022 வரை ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி வேத பாடசாலையில் தங்கி சிவாலயத்தில் ஸ்ரீ சந்திரமௌலிஸ்வரர் பூஜையை நடத்தினார்கள். ஒரு வேத சபை ஏற்பாடு செய்யப்பட்டு அதில் வேத பாடசாலை அத்தியாபகர் கல்லாபள்ளி சீதாராம கனபாடிகள் கௌரவிக்கப்பட்டு ஸ்வர்ண காப்பும் அணிவிக்கப்பட்டது.

ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் 20.11.2022 அன்று இரவு 9.45 மணிக்கு தனுகு வழியாக முன்கண்டா கிராமத்திற்கு புறப்பட்டார்கள். வழியில் தனுகு இடத்தில் வாடிக்கையாளர் விவகாரம் உணவு மற்றும் பொது விநியோகம் துறை அமைச்சர் அவர்களின் இல்லத்தில் ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. காஞ்சி ஸ்ரீ மகா ஸ்வாமிகள் 1937-ல் முன்கண்டா கிராமத்திற்கு விஜயம் செய்துள்ளார்கள். இந்த கிராமம் வேதங்களும் சாஸ்திரங்கள் அறிந்த கவிஞர்களைக் கொண்டதாகும். அலங்கார சாஸ்திரத்தில் விற்பனரான ஜெகன்னாத பண்டிதர் 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கிராமமாகும். இந்த கிராமத்தை பூர்வீகமாகக் கொண்ட ஸ்ரீ புல்ய உமா மகேஸ்வர சாஸ்திரி என்பவர் சமஸ்கிருத மொழியில் 1930-திலேயே ஸ்ரீ மகா ஸ்வாமிகளைப் பற்றி 175 ஸ்லோகங்களை எழுதியுள்ளார்கள்.

முன்கண்டா என்று சமஸ்கிருதத்தில் அழைக்கப்பட்ட தார்மீக வழி கிராமமாகும். இங்கு அக்ரஹார தெருக்கள் 6 ம், ஒரு உயர்நிலைப்பள்ளி மற்றும் கல்லூரியும் உள்ளன. இங்குள்ளவர்கள் பெரும்பாலும் விவசாயிகளாவர். இங்கு இரண்டு சிவன் கோவில்கள் உள்ளன. இங்குள்ள பொதுமண்டபம் ஒன்று சிந்தாமணி கலாபதி என்ற பெயரில் உள்ளது. இங்கு ஸ்ரீ சந்திரமௌலீஸ்வரர் ஒரு கால பூஜை நடைபெற்றுள்ளது. கார்த்திகை சோமவார தினத்தன்று அல்பதுவாதசி ஆனதாலும் பிரதோஷ தினமானதாலும் இரண்டு கால பூஜைகள் காலை 6.00 மணி முதல் 10.00 மணி வரை நடைபெற்று பின்னர் ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் பக்தர்களுக்கு தரிசனமும் தந்து அருளினார்கள்.

சோமவார பூஜை வேதவிற்பனர்களின் ஏகாதச ருத்ரஜப பாராயணத்துடன் மாலை 3 மணிக்கு துவங்கி இரவு 8:30 மணிக்கு முடிவுற்றது. செவ்வாய்க்கிழமை ஸ்ரீ ஆசார்ய

*சுவாமிகள் இரண்டு சிவாலயங்களுக்கும் விஜயம் செய்தார்கள். மாத சிவராத்திரி தினமானதால் வில்வ லட்சார்ச்சனை ஸ்ரீ சரணர்களின் முன்னிலையில் செய்விக்கப்பட்டு தீபாராதனையும் நடைபெற்றது.*

*21. 11. 2022 முதல் 23. 11. 2022 வரை இக்கிராமத்தில் முகாம் நடைபெற்றது.*

*23. 11. 22 காலை 7 மணிக்கு துவங்கி 3- கால பூஜை முடிந்து கிராமப்பகுதிகள் சிலவற்றிற்கு விஜயம் செய்த பின்னர் மாலை ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் முகாம் பேரூருக்கு புறப்பட்டது.*


## ''ஸ்ம்ருதி முக்தாபலம்'' என்னும் வைத்தியநாத தீக்ஷிதீயம்

*அரிய தர்மசாஸ்திர புத்தகத் தொகுப்பு எளிய தமிழ் உரையுடன் வெளியிடப்பட்டுள்ளது.*

1. வர்ணாஸ்ரம தர்மகாண்டம், 2. ஆஹ்னிககாண்டம் பூர்வபாகம், 3. ஆஹ்னிக காண்டம் உத்தரபாகம், 4. ஆசௌச காண்டம், 5. ஸ்ராத்தகாண்டம் பூர்வபாகம், 6. ஸ்ராத்த காண்டம் உத்தரபாகம், 7. திதிநிர்ணயகாண்டமும் ப்ராயச்சித்த காண்டமும் என்ற 7 பாகங்கள் சேர்த்து மிகக்குறைந்த விலையில் கிடைக்கப் பெறுகின்றது. ஆஸ்திக அன்பர்கள் அனைவரும் வாங்கி பயன் பெறலாம்.




ஏழு தொகுதிகள் அடங்கிய ஒரு செட் விலை 2500

கூரியர், தபாலில் பெற மேலும் 500 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்

தொடர்பு கொள்ளவேண்டிய அலைபேசி எண்கள்

**குறிப்பு :**

**இந்தத் தொகுப்பு ஸ்ரீ மடம் புக் ஸ்டால் மற்றும் ஸ்ரீ பெரியவாள் முகாமிலும் கிடைக்கும்**

# ஆசாரமும், ஒழுக்கமும்

ஆசாரம், ஒழுக்கம் இவை இரண்டும் ஒரே பொருளைக் குறிக்கும். ஆசாரமென்பது நம் முன்னோர்களின் நல்லொழுக்கத்தைக் குறிக்கும். இத்தகைய நல்லொழுக்க முள்ளவர்களைப் பார்த்து ரிஷிகளும் புகழ்கின்றனர்.

'ஆசாரத்தால் நீண்ட ஆயுளை அடையலாம், ஆசாரத்தால் நாம் விரும்பும் பிரஜைகளை அடையலாம். ஆசாரத்தால் அழிவற்ற தனம் பெறலாம்; ஆசாரம் அலஷ்மியைத் தடுக்கும். கெட்ட ஒழுக்கமுள்ளவன் உலகத்தில் நிந்திக்கப்படுவான்; அவன் எப்போதும் துக்கத்தையடைந்து வியாதியுள்ளவனாகவும் ஆவான்' என்று மனு ஸ்ம்ருதியில் கூறப்பட்டிருக்கிறது. ஒருவன் ஆசாரமில்லாமல் எவ்வளவு கற்றவனாக இருந்த போதிலும் அவனை யாரும் மதிப்பதில்லையென்பது நிச்சயமான அனுபவம், மண்டையோட்டிலுள்ள தண்ணீரும், தோலால் செய்த பையிலிருக்கும் பாலும் எவ்விதம் பாத்திரத்தின் தோஷத்தால் கெட்டுவிடுகின்றனவோ, அவ்விதமே ஆசாரமில்லாதவன் அனுஷ்டிக்கும் விரதம், நியமம், உபவாஸம் முதலியன பிரயோஜனமற்றவையாகி விடுகின்றன.

'சௌரியம், வீர்யம், குணம், தவம், ஞானம், ஆசாரம் இவை இல்லாத புத்திரன் புத்திரனல்ல. தாயின் மலமூத்திரங்களுக்கு ஸமமானவன் ' என்பது பிருஹஸ்பதி வாக்யம்.

ஸ்ரீ கிருஷ்ண பகவான் கீதையில், '' வர்ணங்களுக்கும் ஆச்ரமங்களுக்கும் எல்லை என்னால் வகுக்கப்பட்டிருக்கிறது; அதை சரிவர அனுஷ்டிப்பவர்களிடத்திலேயே எனக்குப் பிரீதியிருக்கும் ' என்று கூறியிருக்கிறார்.

இவ்விதம் ஆசாரத்தை அனுஷ்டிப்பவன் அடையும் பிரயோஜனங்களைப்பற்றி நாரதர் கூறுகிறார்!

நெல் வயலுக்கிறைத்த நீர் எவ்விதம் வழியிலுள்ள புல் பூண்டுகளையும் வளர்க்கிறதோ, அவ்விதமே தர்ம மார்க்கத்தில் வழுவாமல் செல்லும் மனிதன் மோக்ஷத்தை அடைவதோடு, இம்மையிலும் கீர்த்தி, தனம், தான்யம் மற்றும் தான் விரும்பும் அனைத்தையும் அடைகிறான், ஆசாரமில்லாதவன் ஜன்மம் வீணே. அவனுக்கு இஹத்திலும் பரத்திலும் சுகம் கிடைக்காது என்பதே நம் சாஸ்திரங்களின் ஸித்தாந்தம்.

தோஷமற்றவர்கள் தான் ‘ஸத்‘ எனப்படுவர். ’ஸத்’’ என்றால் நல்லது என்று பொருள். ‘ஸத் ’’துக்களின் நடத்தையே ஸதாசாரமெனப்படும். எந்தத் தேசத்தில் எந்த ஆசாரமானது பரம்பரையாக ஸாதுக்களால் தர்மசாஸ்திரங்களுக்கு விரோதமில்லாமல அனுஷ்டிக்கப்பட்டு வருகிறதோ அதே ஸதாசாரமாகும்.

நம் முன்னோர்களின் தேகம் பரிசுத்தமானது. அவர்களிடத்தில் தவறு ஏதாவது ஏற்பட்டாலும் அது தாமரையிலையில் ஜலம் போல் அவர்களிடம் ஒட்டாது. உதாரணமாக ஒரு பெரிய காட்டுத் தீ, பக்கத்தில் ஒரு நதி, அதனருகில் ஒரு சிறிய குட்டை இவை மூன்றுமிருப்பதாக வைத்துக் கொள்ளுவோம். ஒரு பெரிய காற்றடித்துக் குப்பைகளை கொண்டுவந்து தள்ளிற்று. காட்டுத் தீ அக்குப்பைகளையும் சேர்த்து எரித்து இன்னும் பலமடைந்தது. நதி தன் வெள்ளத்தில் குப்பைகளை அடித்துக் கொண்டு போய்ச் சமுத்திரத்தில் தள்ளிவிட்டது. ஆனால் சிறு குட்டையோ குப்பைகளால் மூடப்பட்டு அதிலிருந்த கொஞ்சம் ஜலமும் வற்றிவிட்டது. இதுபோல் தவ வலிமையுள்ளவர்களிடம் ஏதாவது குற்றம் இருந்தாலும் அது அவர்களைப் பாதிக்காது. ஆனால் தவவலிமையற்ற நாம் அவ்வழியைப் பின்பற்றினால் நமக்குக் குட்டைக்கான கதிதான். பரமசிவன் கொடிய விஷத்தையுண்டார், அது அவரை ஒன்றும் செய்யவில்லை நாமும் அப்படிச் செய்தால் நம் கதியென்ன?

நாம் எவை எவற்றைப் பின்பற்ற வேண்டுமென்பதற்கு நமக்கு ஒரு வழிகாட்டி வேண்டும். இவ்வழிகளை நம் முன்னோர்களான மஹரிஷிகள் தங்கள் தவத்தின் மஹிமையால் கண்டறிந்து நமக்குச் சாஸ்திரரூபமாக அளித்திருக்கிறார்கள். அவற்றை நாம் நன்கு ஆராய்ந்து அவற்றின் விஷயங்களை நன்றாகத் தெரிந்து கொண்டு அதன்படி நடக்காமல், ‘ இவையெல்லாம் பண்டைக் காலத்துக் கதைகள், நமது முன்னேற்றத்திற்கு இவை தடை, இவையெல்லாம் சமையல் அறை ஆசாரம், Kitchen religion" (Sri Nehru - Speech on Hindu Code Bill 2-10-1951.) என்றெல்லாம் வாதித்துப் புறக்கணிப்பது நமது பேதமையையே காட்டும்.

ஆசாரமென்பது ஸ்நானம் செய்து உலர்ந்த வஸ்திரம் தரிப்பது மாத்திரமல்ல. அதில் சுத்தி, சிரத்தை, பக்தி இவை யாவும் அடங்கி இருக்கின்றன. சுத்தியென்பது வெளியில் தோன்றுவது உள்ளுக்குள் மனத்தில் தோன்றுவது என இருவகைப்படும்.

ஸ்நானம் முக்கியமாகத் தேக சுத்திக்காக ஏற்பட்டது. சுத்தமான தண்ணீரில், நதியிருந்தால் நதியில், அல்லது சுத்தமான குளம், ஏரி இவற்றில், இவைகள்

ஒன்றுமில்லாவிட்டால் கிணற்றில் ஸ்நானம் செய்ய வேண்டும். இதனால் உடனே ஏற்படக் கூடியது தேகசுத்தி ஆனால் சூர்யோதயத்திற்கு முன்பு குளிர்ந்த காலை வேளையில் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்வதென்ற வழக்கத்தால் அவ்வப்பொழுது தேகசுத்தி ஏற்படுவதோடு புத்திக்குத் தெளிவும் ஊக்கமும் ஏற்படுகின்றன. விஞ்ஞான சாஸ்திரப்படி நம் மேல்தோலும், மூளை நரம்புகளும் ஒரே இடத்திலிருந்து உற்பத்தியானவை யென்று அறிகிறோம். ஆகையால் தோலுக்குப் பலமூட்டும் போது மூளையும் நரம்புகளும் கூடக் கெட்டிப்படுகின்றன. நரம்பு சம்பந்தமான வியாதிகளுக்குச் சிகிச்சை செய்பவர்கள் உடம்பிலே தைலத்தைப் பூசி வைத்யம் செய்து சௌகரியப்படுத்துகிறார்களென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இதையொட்டியே காலையில் சூர்யோதயத்திற்குமுன் நாம் ஸ்நானம் செய்ய வேண்டுமென்பது சாஸ்திரக் கொள்கை. ஸ்நானம் செய்தபிறகுதான் மற்ற எந்த நல்ல காரியமும் செய்யலாமென்று விதித்திருக்கிறது.

தேகசுத்தியோடு மன சுத்தியும் ஏற்பட வேண்டியது மிகவும் அவசியம். இதற்காகவே ஸ்நானம், ஜபம், பூஜை முதலியவைகளை மௌனமாகவும், சிரத்தையோடும், விதிப்படியும் செய்ய வேண்டும். நம் வீட்டில் வரும் விருந்தாளிக்கு எவ்வளவு விதமான பதார்த்தங்கள் செய்து போட்டாலும் அன்பும் பிரியமுமான வார்த்தையுமில்லாவிட்டால் விருந்தாளிக்கு எப்படித் திருப்தியுண்டாகாதோ, அதேவிதம் பக்தி சிரத்தையில்லாமல் நாம் எந்தக் கார்யம் செய்தாலும் பயனற்றதாக ஆகும்.

தேக சுத்தியோடு மனசுத்தியும் வேண்டுமென்று சொன்னோம். மனம் சுத்தியடைவதற்கு தேகசுத்தியிருந்தால் மாத்திரம் போதாது, ஆகாரசுத்தியும் வேண்டும். ஆகார சுத்தியிருந்தால் தான் மன சுத்தி ஏற்படும். ஆகார சுத்தியிருந்தால் தான் நமது புத்தியும் சுத்தமாகும். கண்டவிடங்களில் நாவின் ருசியையே முக்கியமாகக் கொண்டு கண்ட ஆகாரங்கள் சாப்பிடுவதால் சதையை வளர்த்து வியாதிகளுக்குக் காரணமாகுமேயன்றி மன சுத்தியையும், சாந்தியையும் கொடுக்காது. எவ்வளவு ருசியான பதார்த்தம் சாப்பிட்டாலும் அது தொண்டையளவே, அதோடு மறுபடியும் பசிக்காமலிருப்பதில்லை. இதையொட்டித்தான் ஸ்ரீ சங்கராசார்யாரவர்கள், **''க்ஷுத் வியாதிஸ் சிகித்ஸ்ய தாம்''** என்று ஸோபான பஞ்சகத்தில் சொல்லியிருக்கிறர்கள், இதன் கருத்து பசியென்னும் வியாதிக்குச் சிகிச்சை செய்யவும் என்பது எப்படி வியாதி வந்தால் வியாதிக்குத் தக்க மருந்து சாப்பிடுகிறோமோ, எப்படி மருந்தின் ருசியைக் கவனிக்காமல் அதனால் ஏற்படப் போகும் குணத்தையே கவனிக்கிறோமோ,

அவ்விதமே ஆகாரத்திலும் நமக்கு நியமம் வேண்டும்.

நமது சாஸ்திரமானது நம்முடைய க்ஷேமத்திற்காகவும், சுகத்திற்காகவும் ஏற்பட்டதே தவிர நம்மை அடிமையாக்கவோ, அல்லது கஷ்டத்திற்குள்ளாக்கவோ அல்ல. அதிகாலையில் ஸ்நானம், பிறகு தெய்வ வழிபாடு, ஆகாரத்தில் கட்டுப்பாடு இவைகளை நாம் அனுஷ்டிப்பதால் நோய் நொடியில்லாமல் சந்தோஷமாக வாழ்வோம். ஆனால் காலை நேரங் கழித்து எழுந்து ஒருவித சுத்தியுமில்லாமல் (வெளி சுத்திகூடச் சில சமயம் இல்லாமல்) கண்ட விடங்களில் கண்ட ஆகாரங்களையுண்டு மேல் நாட்டவர்களின் பழக்கங்களே நாகரிகத்திற்கு அறிகுறி என்று எண்ணி, ஒரே துணியைப் பல நாள் துவைக்காமல் அணிந்து வருவதால் நமது தேகம் கெட்டுப் புதிது புதிதான வியாதிகளுக்கு உட்பட்டு நமது சக்தியும் கெட்டுச் சமூகத்தையும் கெடுக்கிறோம்.

கண்கெட்ட பிறகு சூர்ய நமஸ்காரம் செய்வது ‘ போல் செய்யாமல், தம் ஆசாரங்களைக் கொஞ்சம் கூட ஆராய்த்து பார்க்காமல் முன்னேற்றமெனும் பிரமையால் அநேக கெட்ட பழக்கங்களைக் கைக்கொண்டு நாம் கஷ்டப்படாமல், நம் முன்னோர்களின் ஆசாரங்களைப் பின்பற்றி மேன்மையடையும்படி ஈசுவரன் நமக்குப் புத்தியளித்து அருள் புரிவாராக !

★★★★★

**பகவத்கீதா கங்காஜல லவ கணிகா பீதா**

**ஸக்ருதபி யேன முராரி ஸமர்ச்சா க்ரியதே தஸ்ய யமேன ந சர்ச்சா ::**

எவனால் பகவத் கீதை கொஞ்சமேனும் அத்யயனம் செய்யப்பட்டுள்ளதோ கங்கை ஜலம் ஒரு துளி பானம் செய்யப்பட்டுள்ளதோ முரனை சம்ஹரித்த க்ருஷ்ணனை ஒரு தடவையாவது ஆராதனம் செய்யப்பட்டுள்ளதோ அவனுக்கு யமனோடு தகராறு இல்லை.

ஸ்ரீ சங்கரரின் மோஹ முத்கரம்

# வேதாந்த ஸம்வத்ஸரம்

*ஜனவரி மதம் தொடராக வரப்போகும் வேதாந்த ஸம்வத்ஸரத்தைப் பற்றிய முன்னுரை ஸ்ரீ சுப்பராய சர்மா அவர்களால் தொகுக்கப்பட்டது. உபநிஷத் மந்த்ரங்கள் தமிழில் விவரிக்கப்பட்டுள்ளன. அவைகளைப் படித்துப் பயன் பெறுக. இதை அச்சாக்க அனுமதி அளித்த ஸ்ரீ சுப்பராய அவர்களுக்கு நன்றி.*

## இந்நூலின் சிறப்பு

1. *ஈச, கேன, காடக, ப்ரச்ன, முண்டக, மாண்டூக்ய, ஐதரேய, தைத்திரீய, சாந்தோக்ய, ப்ரஹதாரண்யக, ச்வேதாச்வதர, கௌஷீதகி, ஜாபாலம் மற்றும் கைவல்யம் என்னும் பதினான்கு உபநிஷத்துகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட மங்களமான இரத்தினங்களைப் போன்ற அறிவுரைகளைக் கொண்ட வேதாந்த சாகரமாகிய இந்நூல்* '**வேதாந்த ஸம்வத்ஸரம்**' *எனப்படுகிறது.*

2. *ஜனவரி ஒன்று முதல் டிசம்பர் முப்பத்திஒன்று வரையிலான தினமொரு அறிவுரையாக 366 அறிவுரைகளும், ஞாயிற்றுக்கிழமை முதல் சனிக்கிழமை வரை தினம் ஒன்றாக ஏழு அறிவுரைகளும் மற்றும் சித்திரை முதல் பங்குனி வரை மாதத்திற்கு ஒன்றாக பன்னிரண்டு அறிவுரைகளும் (366+7+12) ஆக 385 பவித்ரமான வேதாந்த அறிவுரைகளால் அலங்கரிக்கப்பட்ட மங்களமான நூல்* '**வேதாந்த ஸம்வத்ஸரம்**' *ஆகும்.*

3. '**இதி வேதாந்த பாஸ்கர:**' *என்ற ஸ்துதியின் மூலம் வேதாந்தத்தின் சாதனை, சித்தாந்தம், இரகசியங்கள் ஆகிய மூன்றையும் தெளிவுபடுத்தி இந்நூல் ஆசிரியர் இயற்றிய முன்னூற்று எண்பத்தைந்து ஸ்லோகங்களும் நித்ய பாராயணத்திற்கு ஏற்றவாறு அமைந்தது இந்த* '**வேதாந்த ஸம்வத்ஸரம்**' *ஆகும்.*

4. *முன்னூற்றி எண்பத்தைந்து எளிமையானதும் சிந்தனையைத் தூண்டும் தலைப்புகளால் வாசகருக்கு வேதாந்தத்தின் சுவையும், பெருமையையும், மகிழ்ச்சியையும் அளிக்கும் சித்தாகர்ஷக வேதாந்த நூல்* '**வேதாந்த ஸம்வத்ஸரம்**' *ஆகும்.*

5. வேதாந்தத்தின் நேரடியான, பரிசுத்தமான, மனதில் பதியும்படியான மந்திரங்களினால் ஞானம் என்னும் அமிருதத்தைப் பொழியும் ஜ்ஞானாம்ருத வேதாந்த நூல் இந்த '**வேதாந்த ஸம்வத்ஸரம்**' ஆகும்.

6. வேதாந்த அறிவுரைகள் மூலம் சாதகர்களை சித்தர்களாகவும் முமுக்ஷுக்களை முக்தர்களாகவும், ஜிஜ்ஞாஸுக்களை ஞானிகளாகவும், மனிதர்களை மேன்மை பொருந்தியவர்களாகவும், துக்கத்தில் மூழ்கியிருப்பவர்களை மகிழ்ச்சியுள்ளவர்களாகவும், கலக்கமடைந்தவர்களை அமைதியற்றவர்களாகவும், ஞானத்தையே அடைய விரும்புபவர்களை ஞானிகளாகவும் செய்யக்கூடிய வேதாந்த அற்புத கிரந்தம் இந்த '**வேதாந்த ஸம்வத்ஸரம்**' எனப்படுகிறது.

7. வேதாந்தத்தின் வாசனையை அறியாமல், உலக இன்பங்களில் மட்டுமே மூழ்கியிருக்கும் சாமான்ய மனிதருக்கும் ஆத்ம ஞானம் அல்லது மோக்ஷத்தின் சொரூபத்தை எளிய நடையில் உணர்த்தும் வேதாந்த திவ்ய கிரந்தம், '**வேதாந்த ஸம்வத்ஸரம்**' ஆகும்.

8. தினமும் சாதகனை பத்து நிமிடங்களாவது வாசிக்கத் தூண்டும் வேதாந்த ப்ரேரகக் கிரந்தம், '**வேதாந்த ஸம்வத்ஸரம்**' ஆகும்.

9. சுக்லபக்ஷம், கிருஷ்ணபக்ஷம், பௌர்ணமி, அமாவாசை, செவ்வாய்க் கிழமை, சனிக்கிழமை, கிரகணம், ஸங்க்ரமணம் போன்று எந்தவித வேறுபாடின்றி எல்லா நாட்களையும் புண்ணியமானதாகச் செய்யும் வேதாந்த பவித்ர கிரந்தம், '**வேதாந்த ஸம்வத்ஸரம்**' ஆகும்.

10. சம்சார துக்கங்களினால் அவதிப்படும் மக்களுக்கு தினம் பத்து நிமிடங்கள் மட்டும் படிப்பதினால் மன அமைதி, மகிழ்ச்சி, திருப்தி அளிக்கும் நித்யானந்த வேதாந்த நூல், '**வேதாந்த ஸம்வத்ஸரம்**' ஆகும்.

11. தினமும் எப்பொழுது வேண்டுமானாலும் பிரம்ம முகூர்த்தம், அதிகாலை, மத்யானம், மாலை, இரவு என எல்லா நேரங்களிலும் ஆர்வத்துடன். படிப்பவர்களுக்கு மனதிற்கு அமைதியளிக்கும் வேதாந்த சாந்தி கிரந்தம், '**வேதாந்த ஸம்வத்ஸரம்**' எனப்படுகிறது.

12. நாள், வாரம், மாதம், வருடம் வாழ்நாள் முழுவதும் ஆனந்தம் அளிக்கும் பரிவர்தன வேதாந்தக் கிரந்தம், '**வேதாந்த ஸம்வத்ஸரம்**' ஆகும்.

13. வாதம், பிரதிவாதம், தர்க்கம் இவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்டு சரளமும் சுதந்தரமுமான வேதாந்த அறிவுரைகளால் மனிதர்களை ஆன்மீக வாழ்க்கையில் உயர்த்தக் கூடிய உய்விப்பதான மறைநூல் '**வேதாந்த ஸம்வத்ஸரம்**' ஆகும்.

14. ஜன்மமரணரூபமாகிய, சுகதுக்கங்கள் நிறைந்த சம்சார சுகத்தை சுலபமாகத் தாண்டச் செய்யும் பவதாரக வேதாந்தக் கிரந்தம், '**வேதாந்த ஸம்வத்ஸரம்**' ஆகும்.

15. ஆன்மீக சிந்தனையாளருக்கு சாதனைகளின் இரகசியத்தை உணர்த்தி விவேக வைராக்யத்தை உபதேசித்து அவர்களைச் சுலபமாக ஆத்மஞான ராஜமார்க்கத்தில் அழைத்துச் செல்லும் சாதகமார்க்க வேதாந்தக் கிரந்தம், '**வேதாந்த ஸம்வத்ஸரம்**' ஆகும்.

16. ஸம்ஸ்கிருத மொழியை பயில விரும்பும் மாணவர்களுக்கு ஸ்லோகங்களின் மூலம் வேதாந்தத்தின் மீது சுவையை ஏற்படுத்தும் ஸம்ஸ்கிருத போதக வேதாந்தக் கிரந்தம், '**வேதாந்த ஸம்வத்ஸரம்**' எனப்படுகிறது.

17. வேதாந்தத்தின் ஆழத்தை, நன்றாக அறியவிரும்பும் சாதகருக்கு அதன் உண்மைகளைப் புரியவைக்கும் வேதாந்தப் பிரரோசகக் கிரந்தம், '**வேதாந்த ஸம்வத்ஸரம்**' ஆகும்.

18. நண்பர், உறவினர் வீடுகளுக்குச் செல்லும் போது இப்புத்தகத்தை பரிசளிப்பதின் மூலம் அவர்களுக்கும் வேதாந்தத்தின் மீது ஆவலை ஏற்படுத்தும் ஆப்தவேதாந்தக் கிரந்தம், '**வேதாந்த ஸம்வத்ஸரம்**' ஆகும்.

19. பிறந்ததினம், கல்யாண நாள், பண்டிகை தினங்கள் போன்ற விசேஷ நாட்களில் இந்நூலைப் படிப்பதன் மூலம் ஒவ்வொரு நாளையுமே விசேஷ நாட்களாக மற்றும் நூல் '**வேதாந்த ஸம்வத்ஸரம்**' ஆகும்.

20. ஓய்வு ஒழிவின்றி பிஸியாக ஓடும் இன்றைய மனிதர்களுக்கு வேதாந்த காப்ஸ்யுல்கள் மூலம் உடலுக்கும் மனதிற்கும் ஆரோக்கியத்தை அளிக்கும் வேதாந்த ஆரோக்கிய சூர்ண கிரந்தம் '**வேதாந்த ஸம்வத்ஸரம்**' ஆகும்.

**வேதாந்தத்தின் மூலமே பரமசாந்தியும்**

**பரமானந்த பிராப்தியும்**

# வேதாந்தத்தின் பத்து முக்கிய அறிவுரைகள்

1. பரமாத்மா ஒருவனே உண்மை. இவன் ஒருவனே சத்யம். இவனுக்கே பரப்பிரம்மம் என்றும் பெயர்.

2. பரப்பிரம்மம் எல்லாப் பிராணிகளிலும் சமமான சொரூபமாகவும் உள்ளது.

3. தேவலோகத்தை அடைதல் மாத்திரம் முக்தியாகாது.

4. கர்மோபாசனைகளைச் செய்து மரணத்தின் பிறகு சொர்க்கத்தை அடைந்து புண்ணிய பலன்களை அனுபவித்த பின் மீண்டும் பூமிக்கு வந்தே ஆக வேண்டும்.

5. பரப்பிரம்மம் சம்சாரமற்ற நித்யசுத்த நித்புத்த நித்ய முக்த சொரூபம் ஆகி உள்ளது. இதை நிர்குணம், நிர்விசேஷம், நிரூபாதிகம், நிரவயவம் - என்பார்.

6. ஒவ்வொரு பிராணியும் பரிபூர்ண பரப்பிரம்ம சொரூபமே. அவித்யையினால் இந்த இரகசியத்தை அவைகளுக்கு அறிந்து கொள்ள முடிவதில்லை.

7. பிரம்மத்தை அடைவதே மனித ஜன்மத்தின் குறிக்கோள். இதுதான் கைவல்யம், இதுதான் முக்தியும்.

8. மனிதன் சம்சார போகங்கள் சாரமற்றவை என்று அறிந்து முக்தியை விரும்புவர் ஆகவேண்டும்.

9. ச்ரோத்ரியனும் பிரம்மநிஷ்டனுமான குருவை அணுகி வேதாந்த சந்தேகங்களை கேட்டறிய வேண்டும்.

10. பரிசுத்தமான அந்தகரணத்தில் வேதாந்த வாக்கியார்த்த விசாரத்தினால் ஆத்மஜ்ஞானம் உண்டான பின் அவித்யை நாசமாகிறது. அத்தகையவன் ஜீவன் முக்தன் ஆகிறான்.

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி

புலவர் மா. வெங்கடேசன்



சென்ற இதழில் புலவர்கள் எழுதிய சிவஸ்தோத்ரங்களை அச்சிட அச்சகத்துக்கு வந்ததைச் சொன்னேன். காலை 9 மணி. அச்சகத்தாரிடம் விஷயத்தைச் சொன்னேன். அவர்கள் மொத்தம் முடிக்க 3 நாட்களாகும் என்றார்கள். நான் அவர்களிடம் பெரியவா ''எல்லாம் போட்டுத் தருவா'' என்று சொல்லியதைச் சொன்னேன். அவர்களும் சற்றுத் தயங்கி கூடுதலாக வேலையாட்களை வைத்து முடிக்கப் பார்க்கிறோம், எப்படியும் இரவு 11 மணி ஆகிவிடும், விஷயத்தைக் கொடுங்கள் என்றார்கள். அதைப் பார்த்து விட்டு எல்லாவற்றையும் தெளிவாக எழுதித் தாருங்கள் என்று கூற ஒவ்வொரு புலவரின் எழுத்தையும் நானே எழுதித்தர அவர்கள் அச்சுக் கோத்து வந்தார்கள். இவ்வாறு இடைவிடாது செய்து இரவு 10 மணிக்கு ஸ்ரீ பெரியவாளிடம் ஸமர்ப்பித்து இன்னும் 1500 ப்ரதிகள் 11 மணிக்குள் முடியும் என்று கூற அவர் இதையெல்லாம் கைலாச நாதர் கோவிலில் வினியோகம் செய் என்று பணித்தார்கள்.

*ஒருபகுதியை அன்பர்கள் மூலம் கைலாச நாதர் கோவிலுக்கு அனுப்பினேன். மீதி ப்ரதிகளை ஸ்ரீமடம், கச்சபேசம், ஏகாம்பர நாதர் ஆலயம் இடங்களில் வினியோகம் செய்து விட்டு இரவு 1 மணிக்கு பெரியவாளிடம் 'வினியோகம் முடித்தாயிற்று' என்று விண்ணப்பித்தேன். பெரியவர்கள் புன்முறுவலோடு தன் தொண்டரிடம் 'சொன்னபடி செய்துவிட்டார்' என்று அடியேனைப் பற்றித் தெரிவித்தார்கள்.*

*'எல்லாம் பெரியவரின் அனுக்ரஹம்' என்று நான் கூறி திருவடிகளில் வணங்கி நின்றேன். அவரும் திருக்கரம் உயர்த்தி ஆசீர்வதித்தார்கள். மகா சிவராத்ரியில் அந்த சிவ பெருமானே அடியேனுக்குத் திருவருள் புரிந்ததாகவே ஸ்ரீ மகா பெரியவாளின் அருளனுக்ரகத்தை எண்ணிப் பேரானந்தமடைந்தேன்.*

**பிறை சூடிய பெருமானின் பெயர் தாங்கும்**
**திரு பெரியவர்களின் தாள் போற்றி**
**தெளிவு குரு மேனி காணல்**
**தெளிவு குரு வார்த்தைக் கேட்டல்**
**தெளிவு குரு நாமம் செப்பல்**
**தெளிவு குரு உரு சிந்தித்தல் தானே**

*(தொடரும்)*

# மகாபாரத சுருக்கம்

பாரதக் கதையை மூலம் மட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம்.
**டாக்டர். வே. ராகவன்** - தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து அளிக்கிறோம். மொழி பெயர்ப்பாளர் : **ஜயவிஜயா**



*அபிமன்யு இப்படி பல பேரால் வஞ்ஜகமாகக் கொல்லப்பட்டான். அர்ஜுனன் தன் சபதமான சமசப்தகர்களை கொல்வது என்பதை நிறைவேற்றி வெற்றிக் களிப்புடன் தன் பாசறைக்குத் திரும்பினான். அங்கு அபிமன்யு இல்லாதிருப்பதையும் தன் சகோதரர்கள் விசனத்துடன் இருப்பதையும் கண்டான். வெற்றியுடன் வந்திருக்கும் என்னை ஏன் நீங்கள் பாரட்டவில்லை ? ஏன் விசனத்துடன் இருக்கிறீர்கள் ? என்று வினவினான்.*

***யுதிஷ்டிரர்*** *: அர்ஜுனா நீ ஸமசப்தகர்களோடு போரிட சென்றபின் த்ரோணர் என்னை உயிருடன் பிடிக்க ப்ரயத்னப்பட்டார். அவருடைய சக்ர வ்யூஹத்தை எங்களால் உடைக்க முடியவில்லை. எனவே நான் அபிமன்யுவிடம் அந்த வ்யூஹத்தை உடைத்து உள்ளே போ, நாங்கள் பின்தொடர்வோம் என்று கூறினேன் அவனும் சம்மதித்து சக்ர வ்யூஹத்தை உடைத்து உள்ளே ப்ரவேசித்தான். நாங்களும் அவன் பின்னாலேயே சென்றோம். அப்போது ஜயத்ரதன் எங்களை உள்ளே வர விடாமல் தடுத்து விட்டான்.*

*த்ரோணர், க்ருபர், கர்ணன், துச்சாசனன் இவர்களால் சூழப்பட்டு அபிமன்யு போர் செய்து கொண்டிருந்தான். நிராயுதபாணியான அவனை அவர்கள் கொன்றார்கள் தர்மமல்லாததைச் செய்தனர்.'' அர்ஜுனன் இதோ இப்போதே சூளுரைக்கிறேன். நாளை அஸ்தமனத்திற்குள் ஜயத்ரதன் அழிவான்''.*

## ஜயத்ரத வதம்

ஒற்றர்கள் மூலம் இந்த அர்ஜுனனின் சபத்தைக் கேட்ட ஜயத்ரதன் நடு நடுங்கிப்போய் த்ரோணரிடம் முறையிட்டான்.

த்ரோணர் அச்சம் வேண்டாம் வீர என் வ்யூஹத்தைத் தாண்டி அர்ஜுனன் உன் பக்கம் வரான். உன் கடமையைச் செய்'. த்ரோணரால் சமாதானமடைந்த ஜயத்ரதன் போரிட சம்மதித்தான்.

தன் உயர்ந்த ரதத்தில் ஏறி அர்ஜுனன் ஜயத்ரதனைத் தேடி போர்க்களத்தில் புகுந்தான். த்ரோணரின் வ்யூஹத்தை உடைத்தான். துமுல யுத்தம் செய்தான். படைகளைச் சாய்த்தான். ஜயத்ரதனைத் தேடினான். பொழுது சாய்ந்து கொண்டிருந்தது. ஜயத்ரதனைக் காணவில்லை. கவலையுடன் இருக்கும் அவனிடம் க்ருஷ்ணர் சொல்வார்.

க்ருஷ்ணர், கவலைப்படாதே அர்ஜுனா! இப்போது மாயையால் சூர்யனை மறைக் கிறேன். கதிரவன் மறைந்துவிட்டான் என்ற உவகையில் ஜயத்ரதன் வெளிப்படுவான். அப்போது அவனைக் கொல்'' தான் சொன்னபடியே கதிரவனை க்ருஷ்ணர் மறைக்க ஜயத்ரதன் துள்ளி எழ அர்ஜுனன் தன் பாணத்தை ஏவ ஜயத்ரதன் மடிந்தான். எங்கும் ஹாஹாகாரம் எழ க்ருஷ்ணர் அர்ஜுனனிடம் ஜயத்ரதனின் தலையைக் கீழே தள்ள வேண்டாம், உபாசனை செய்து கொண்டிருக்கும் அவனுடைய தந்தை விருத்தக்ஷத்ரனுடைய கையில் வீழவை என்றார். அர்ஜுனனும் அப்படியே செய்ய தன் கையில் வீழ்ந்த தலையை பூமியில் வ்ருத்தக்ஷத்ரன் போட தன் தலை வெடித்து மடிந்தான்.

# ஸனாதன தர்மம் :

ரா ஸ்ரீ




298. **கேள்வி** : எதுவரையில் ஸம்ஸார சக்ரம் சுழலும்?

**பதில்** : பரமாத்மாதான் எல்லாம். அதை உணராமல் பேத உணர்ச்சியுடன் இருக்கும் வரை ஸம்ஸார சக்ரம் சுழலும்.

299. **கேள்வி** : ஆத்மா வேறு, உடல் வேறு என்று எப்படி அறிவது?

**பதில்** : உடல் மாறி கொண்டே இருக்கிறது. அதைத் தாங்கும் ஆத்மா அழியாமல் உள்ளது. உடல் அழிகிறது ஆத்மா அழிவதில்லை என்பதால் இவை இரண்டும் வேறு வேறு என்று புலப்படும்.

300. **கேள்வி** : ஒரே ஆத்மா பல ஜீவன்களிலுள்ளது என்பதை எப்படி உணரமுடியும்?

**பதில்** : மலையில் பொழியும் மழை பலவாறாகப் பிரிந்து வெவ்வேறு திசைகளில் ஓடுகிறது. அதே மழை நீர்தான் நதி, குளம், குட்டை, ஆறு, ஏரி என்று பல பெயர்களைத் தாங்கி நிற்கிறது. இவைகளுக்கு ஆதாரம் மழை நீர். அதேபோல் ஒரே ஆத்மா பல ஜீவங்களில் உள்ளது. ஜீவன்களின் வேறுபாட்டைப் பார்ப்பவர்கள் அவைகளில் உள்ள ஆத்மாவைப் பார்ப்பதில்லை. அதனால் ஆத்மா பல என்னும் எண்ணம் ஏற்படுகிறது.

301. **கேள்வி** : இந்த ஆத்மா எப்படியுள்ளது?

**பதில்** : பாலில் நெய் போன்றும், விறகில் தீ போலும், தாயின் கர்பத்தில் உள்ள சிசு போலும் மறைந்துள்ளது.

302. **கேள்வி** : ஆத்மா ஒன்றே என்பதற்கு உதாரணமுண்டா?

**பதில்** : காற்று எங்கும் பரவி உள்ளது. இது இல்லாத இடமில்லை. இது உடலின் உள்ளே இருக்கும் போது ப்ராணன், அபானன் இப்படி பல பெயர்களுடன் விளங்குகிறது. உடலை விட்டு வெளி வந்தவுடன் காற்றில் கலந்து விடுகிறது அது போல்தான் ஆத்மாவும்.

303. **கேள்வி** : மனிதனின் செயல்கள் ஆத்மாவைச் சாராது என்று எங்கனம் கூறுவது?

**பதில்** : ஸூர்யன் இருக்கிறான். கண்ணில் தோஷமுள்ளவன் அவனைப் பார்க்க முடியாது. அது சூர்யனின் தோஷம் என்று சொல்ல முடியுமா? அவனுடைய ஒளியின் கீழ் நல்லவைகளும் நடக்கின்றன அல்லவைகளும் நடக்கின்றன. இவை எதுவும் சூர்யனை பாதிக்காது. அது போலவே உபாதிகள் பல இருந்தாலும் அவற்றை இயக்கும் ஆத்மா பாதிக்கப்படாது.

304. **கேள்வி** : ஸம்ஸாரத்தை அஸ்வத்தம் (அரச மரம்) மரத்திற்கு ஒப்பிடுவதேன் ?

**பதில்** : ஸ்வ என்றால் நாளை. அ என்றால் இல்லை என்று பொருள். நாளை என்பது சாஸ்வதமல்ல என்பதைக் குறிக்க அரச மரத்தோடு ஒப்பிடப்படுகிறது.

305. **கேள்வி** : தான் உடலல்ல ஆத்மாதான் என்னும் ஞானம் பெற என்ன வழி?

**பதில்** : பார்க்கும் உலகில் பார்க்கப்படும் பொருள்களை பார்ப்பவன் அறிகிறான். இந்த்ரியங்கள், மனம், புத்தி இவைகளின் வழியாக இந்த நிகழ்ச்சி நடை பெறுகிறது. இவை தூக்கத்தில் இல்லை. தூக்கத்தில் விழிப்பு நிலையில் உள்ளவை இல்லை. ஆழ்ந்த தூக்கத்தில் எதுவும் தெரிவதில்லை. அறியப்படும் பொருள்களை அறிபவன் ஒருவன். அவனே ஆத்மா. பாலில் நெய் போல் மறைந்து இருப்பவன். அவன் சன்னிதியில் நிகழ்ச்சிகள் நடக்கின்றன. அவன் பாதிக்கப்படுவதில்லை.

306. **கேள்வி** : இந்த ஆத்மாவை எங்கனம் காணலாம்?

**பதில்** : அலையாத மனத்தினால், நித்யானித்ய வஸ்து விவேகம் கொண்டு ப்ரம்ம ஸ்வரூபத்தைத் த்யானம் செய்து வர கை கூடும்.

307. **கேள்வி** : சாகாத நிலை எப்போது வாய்க்கும்?

**பதில்** : ஆசைகள் அழிய சாகா நிலை வரும்.

முற்றும்